₹10

fmpb

# அறைகூவல்

Volume 55 Issue 3 March 2025

*“நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.” யோவான். 15:10*

# கீழ்ப்படிதல்

## தேவனுக்குக் கீழ்ப்படிதலில் இன்னும் அதிகமாய்



இவைகளிலும் அதிகமாய்

யோவான்.21:15

# ஆரம்ப வரிகள்...

## விசுவாசமுள்ள கீழ்ப்படிதல்



மத்திய கிழக்கு பாலைவனங்களில் அரேபிய குதிரைகள் அதன் பயிற்சியாளர்களுக்கு கீழ்ப்படியும் வரை கடுமையாக பயிற்றுவிக்கப்படும். அப்பயிற்சியின் இறுதியில் குதிரைகளுக்கு அநேக நாட்கள் தண்ணீர் கொடாமல் ஒரு தேர்வுக்குட்படுத்துவார்கள். பின்னர் ஒரு நீர்நிலைக்கு அருகாமையில் அழைத்துச்சென்று அதனை அவிழ்த்து விடுவார்கள். அக்குதிரைகள் தண்ணீர் அருந்துவதற்கு தலையைத் தாழ்த்தும்போது விசில் அடித்து தண்ணீரை அருந்தவிடாமல் நிறுத்திவிடுவார்கள். குதிரைகள் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டிருந்தால் அவை தன் பயிற்சியாளரிடம் தண்ணீர் அருந்தாமலே வரவேண்டும். இல்லையென்றால் அக்குதிரை மறுபடியும் பயிற்சிக்குட்படுத்தப்படும். அந்த பயிற்சியாளர் தன் குதிரைக்கு என்னவேண்டுமென்று அறிந்திருப்பதால் அதை தாகத்தால் சாகவிடமாட்டார். திசைத்தெரியாத அரேபியா பாலைவனங்களில் தன் குதிரையை மட்டும் நம்பி செல்லும் பயிற்சியாளனுக்கு, தன் குதிரை கட்டுப்பட்டிருப்பது அவசியம்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஒன்பது நெறிமுறைகளில் ஒன்று **கீழ்ப்படிதல்** (யோ. 15:10). வேதத்தில் கீழ்ப்படிதலைப் பற்றி பல வேதாகம பாத்திரங்கள் (நோவா, ஆபிரகாம்...) மூலம் தேவன் நமக்கு கற்றுக்கொடுக்கிறார். அதில் நாம் தேவனுக்கும், அவர் கட்டளைகளுக்கும், அவர் நியமித்த தலைவர்களுக்கும் கீழ்ப்படியவேண்டியதின் அவசியத்தையும், மீறினால் வரும் சாபம், தண்டனை போன்றவற்றையும் விளக்கியுள்ளார் (உபா. 28). இராமுழுவதும் மீன் கிடைக்காமல் களைத்துபோயிருந்த பேதுருவிடம் வலையை ஆழத்தில் போட கட்டளையிட்டபோது, இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; **ஆகிலும்** உம்முடைய வார்த்தையின்படியே வலையைப்போடுகிறேன் என்று கீழ்ப்படிந்ததால் வழிந்தோடத்தக்கதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார் (லூக். 5:5). சாத்தியமில்லாத மற்றும் புரியாத (ஓசியா 1:2,3) சூழ்நிலைகளிலும் நமது உடனடி கீழ்ப்படிதலை தேவன் எதிர்பார்க்கிறார். தாமதமான அல்லது அரைகுறையான கீழ்ப்படிதல் கீழ்ப்படிதல் அல்ல. நாம் அதிகாரிகளுக்கும், தேச சட்டத்திற்கும் கீழ்ப்படிய வலியுறுத்தப்படுகிறோம் (எபி. 13:17). தேவனை நாம் நேசிக்கிறோம் என்றால் அவருக்கு கீழ்ப்படிவோம்.

**கீழ்ப்படிதலின் அவசியம்:** அது என் கடமை (பிர. 12:13, லூக். 17:7-10), நம் அன்பின் வெளிப்பாடு (யோ. 14:15, 21), நம் தாழ்மையின் அடையாளம் (நீதி. 22:4).

**கீழ்ப்படிதலின் ஆசீர்வாதம்:** தேவன் மகிமைப்படுகிறார் (லேவி. 9:22-23), சமாதானம் கிடைக்கிறது (2 நாளா. 14:1-6), அற்புதத்திற்கு வழிவகுக்கிறது (1 இராஜ. 14:13-16), நம் காரியங்கள் வாய்க்கும் (யோசு. 1:6-9), சுக வாழ்வு (யாத். 15:26).

**கீழ்ப்படியாமையின் விளைவு:** மனித குலத்தின் வீழ்ச்சி (ஏவாள்), குழப்பம் (இஸ்ரவேலர்), மோதல் (சிம்சோன்), இழப்பு (யோனா), மனவருத்தம் (தாவீது), அடிமைத்தனம் (இஸ்ரவேலர்), சாபம் (உபா. 28).

**கீழ்ப்படிதலின் இலட்சியம்:** நாம் தேவனுக்கு உடனடியாக (Implicit), கடுமையான சூழ்நிலையிலும் (in difficult Situations), அர்த்தமற்ற சூழ்நிலையிலும் (illogical) முழுமனதோடு கீழ்ப்படிவது அவசியம்.

நாம் இவ்வாறு கீழ்ப்படியும் போது பலர் நம்மை ஏளனமாகவும், நிந்திக்கவும், முட்டாளாகவும் கருதலாம். பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம் (1 சாமு. 15:22). எனவே நாம் நம் தேவனுக்கு இன்னும் அதிகமாய் கீழ்ப்படிவோம்.

– **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.
இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

**அறைகூவல்**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

## மகளிர் மாநாடு 2025

**(செங்குன்றம் – காரனோடை – காவாங்கரை & புயல்)**

நாள்: 01.03.2025 சனிக்கிழமை
காலை 9.30 - 4.30 வரை
இடம்: இ.சி.ஐ. தூய பவுல் ஆலயம், கலைஞர் கருணாநிதி தெரு, (கணேஷ் எடைமேடை எதிரில்) காந்தி நகர், செங்குன்றம், சென்னை, 52.
தேவ செய்தி: **திருமதி. வசந்தி ஜார்ஜ்** (FMPB மிஷனெரி)
மிஷனெரி பகிர்வு: **திருமதி. ஜெபராணி எபினேசர்** (FMPB மிஷனெரி)

## விசுவாச மகளிர் கூடுகை - 2025

நாள்: 31.03.2025 திங்கள்
காலை 9.00 - 4.30 வரை
இடம்: CSI, அடைக்கல நாதர் ஆலயம், திப்பணம்பட்டி, பாவூர்சத்திரம், தென்காசி.
தேவ செய்தி: **திருமதி. மரகதமணி ரூபன்,** FMPB சென்னை
பணித்தள பகிர்வு: **திருமதி. திலகவதி,** FMPB மிஷனெரி (மஹாராஷ்டிரா)

## மிஷனெரி தரிசன கூடுகை - 2025
## VISION MISSION 25

நாள்: 14.04.2025
காலை 9.00 - 5.00 வரை
இடம்: YMCA Auditorium, வெப்பேரி
செய்தி: **Rev. இம்மானுவேல் ரஞ்சித்சிங், Dr. சாம் டேனியல்**
தொடர்பு: 9445200041, 9444396215, 9941305030
*(குறிப்பு: 18 வயது முதல் 30 வயது வரை இரட்சிக்கப்பட்ட ஆண், பெண் வாலிபர் கலந்து கொள்ளவும்)*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



சந்திக்கப்படாத மக்களை சந்திக்கும் இயக்கத்தின் அன்பு பங்காளர்களே!

இயக்கத்தின் பொது செயலராக இது என்னுடைய இறுதியான தலையங்கமாக இருக்கிறது. இம்மாபெரும் இயக்கத்தின் பொது செயலராக இருந்து பொறுப்புகளை நிறைவேற்ற, 2021 ஏப்ரல் மாதத்தி லிருந்து தற்போது வரை என்னை தேவன்தாமே தாங்கி வழிநடத்தினார். அவருக்கு கீழ்ப்படிவதும், அவரது காலடி தடத்தில் நடப்பதுமே தலையாய பொறுப்பு என்பதனை முதல் நாளிலிருந்து உணர்ந்திருந்தேன். என்னுடைய அறிவுக்கும், திறமைக்கும் எட்டினதுவரை, ஆகச்சிறந்ததை செய்ய தேவன் எனக்கு கிருபை செய்தார். பொது செயலராக என்னுடைய பங்கினை மார்ச் 31ஆம் தேதி நிறைவு செய்ய இருக்கிறேன். **என்னாலன்றி நீங்கள் ஒன்றும் செய்ய இயலாது** என்று நமதாண்டவர் கிறிஸ்து கூறினபடி துதி, கனம், மகிமை, புகழ் அவர் ஒருவருக்கே செலுத்துகிறேன். கர்த்தராகிய ஆண்டவரே! "தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம்– என் வீடும் எம்மாத்திரம்?" 2 சாமு. 7:18.

கடந்த நான்கு வருடங்களில் கொரானா தொற்று மற்றும் ஊழியம் கடுமை யான உபத்திரவங்களின் வழியே சென்ற காலங்களில் என்னை உங்கள் ஜெபங்களின் மூலம் தாங்கி வந்ததற்காக நன்றி சொல்வது என்னுடைய பொறுப்பு மற்றும் தருணம் இது. மகத்துவமான தேவனின் அளவிடப்படமுடியாத கிருபையினால் பொறுப்பினை மன நிறைவாக செய்து முடித்த திருப்தியுடன் இப்பொறுப்பை நிறைவு செய்கிறேன். மிஷனெரிகள், ஜெபக்குழுத் தலைவர்கள் மற்றும் அங்கத்தினர்களோடு பணியாற்ற தேவன் தந்த இந்த நல்வாய்ப்புக்காக தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன். தேவ இராஜ்யத்தின் விரிவாக்கப் பணியில் சபைகள் மற்றும் தலைவர்களுடன் இணைந்து பணியாற்ற கொடுக்கப்பட்ட கிருபையான வாய்ப்பு. உங்களுடன் சேர்ந்து பணியாற்றிய இந்த நான்கு வருட பசுமை நினைவுகள் என் மனதில் நீடித்து நிற்கும்.

**நிர்வாகக்குழு கூட்டம்:** நிர்வாகக்குழு கூட்டத்தின் தலைவராக என்னுடைய கடைசி கூட்டமாக இக்கூட்டம் அமைந்தது. இக்கூட்டத்தில் அநேக முக்கியமான தீர்மானங்களை எடுக்க தேவன் உதவி செய்தார்.

**புதிய செயலர்களின் பயிற்சி:** புதிதாக பொறுப்பேற்ற பணித்தள பிரிவு செயலர்களின் பயிற்சிப் பட்டறை நாக்பூர் மாநகரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு அதில் 9 செயலர்கள் குடும்பமாக கலந்து கொண்டனர். அனைவரும் இணைந்து பயிற்சி பெற இது ஆசீர்வாதமாக அமைந்தது.

**வல்லம் பகுதி அறைகூவல் கூட்டம்:** கடந்த 25 மற்றும் 26 தேதிகளில் அறைகூவல் கூட்டம் வல்லம் பகுதி கௌரவ செயலர் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சில சபைகளின் போதகர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இரண்டாவது நாள்

கூட்டத்தில் நான்கு ஊழியர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். தேவன் அற்புதமாக இக்கூட்டத்தை ஆசீர்வதித்தார்.

**ஷெக்கினா அற்புத சபை:** செங்கல் பட்டிலுள்ள ஷெக்கினா அற்புத சபையின் இரு ஆராதனைகளிலும் தேவ செய்தி யினை கொடுக்க தேவன் கிருபை பாராட்டினார். இரு ஆராதனைகளிலும் இயக்கத்தின் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொள்ள அனுமதித்த சபையின் போதகருக்கு இயக்கமாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். சபையின் விசுவாசிகள் இன்னும் உற்சாகத்துடன் ஜெபிக்கும் வண்ணம் பஞ்சாபிலிருந்து வந்திருந்த மிஷனெரிகள் பணித்தள செய்திகளைப் பகிர்ந்துகொண்டனர்.

**சித்தாரா பிராந்திய கூடுகை:** புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருச்சபைகளில், ஊழியத்தை பலப்படுத்த கடைபிடிக்க வேண்டிய கலாச்சாரம் பற்றி மிஷனெரிகள், சபை தலைவர்கள் மற்றும் சபை ஊழியர்களுடன் பகிர்ந்துகொள்ள தேவன் கிருபை செய்தார்.

**காந்தேஷ் பிராந்திய சந்திப்பு:** பிப்ரவரி 1 மற்றும் 2ஆம் தேதிகளில் காந்தேஷ் பிராந்தியத்திலுள்ள பணித்தளங்களில் ஊழியம் செய்யும் மிஷனெரிகளை தங்கள் வீடுகளுக்குச் சென்று சந்திக்க தேவன் கிருபை பாராட்டினார். கடினமான சூழ்நிலையிலும் உறுதியாக அர்ப் பணிப்புடன் பணியாற்றிவரும் இந்த மிஷனெரிகளுக்கு நம்முடைய ஜெபம் அதிகம் தேவை.

**தேசிய திட்டக் கூடுகை ஜெப நாள்:** தேசிய திட்டக்கூடுகை 11 மணி நேர உபவாச ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. 7ஆம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. பணித்தள மற்றும் முன்னேற்றப்பணி செயலர்கள் துதி மற்றும் ஜெபக் குறிப்புகளை பகிர்ந்து கொண்டு ஜெபத்திலே வழிநடத்தினர்.

**தேசிய திட்டக்கூடுகை கூட்டங்கள்:** பிப்ரவரி 8 மற்றும் 9ஆம் தேதிகளில் தேசிய திட்டக் கூடுகை நடைபெற்றது. இரண்டு நாட்களிலும் அநேக ஊழிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதங்கள் நடைபெற்றன. இரண்டாவது நாள் எதிர் கால திட்டம் குறித்ததான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, பங்குபெற்றோர் இன்னும் அதிகமாக ஜெபிக்க வேண்டு மென்ற உந்துதலோடும், அர்ப்பணிப் போடும் சென்றனர்.

**செயற்குழுக் கூடுகை:** இயக்கத்தின் 223வது செயற்குழுக் கூடுகை பிப். 7, 9 மற்றும் 10ஆம் தேதிகளில் நடைபெற்றது.

**வட இந்திய முன்னேற்றப் பணியாளர் களின் பயிற்சி:** வட இந்திய முன்னேற்றப் பணி ஊழியர்களுக்கு, முன்னேற்றப் பணியில் புதிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கும் பயிற்சி பிப். 10 மற்றும் 11ஆம் தேதிகளில் நடைபெற்றது.

**பூண்டி கட்டிட திறப்பு விழா:** தேவனுடைய நாமத்திற்கு மகிமையாக சென்னைக்கு அருகிலுள்ள பூண்டி இறைவனின் தோட்டத்தில் ஒரு புதிய கட்டிடம் பிப். 12ஆம் தேதி திறக்கப்பட்டது. இந்த திட்டத் தினை நிறைவேற்ற ஒருமித்த கருத்துடன் திருவள்ளூர் மாவட்ட முன்னேற்றப்பணி தலைவர்கள் செயலாற்றி முடித்தனர்.

**பணித்தள பிராந்திய மற்றும் மண்டல செயலர்கள் கூடுகை:** பணித்தள பிராந்திய மற்றும் மண்டல செயலர்களின் கூடுகை பிப். 13 மற்றும் 14ஆம் தேதிகளில் நடைபெற்றது. ஊழியத்தின் விரிவாக்கம் மற்றும் சபைகளை தன்னிறைவில் பெலப்படுத்துதல் பற்றி விவாதங்கள் நடைபெற்று, திட்டங்கள் தீட்டப்பட்டன.

**செயலர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி:** செயலர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி பிப்.15 முதல் 18 வரை நடைபெற்றது. ஹகாய் நிறுவனத்தின் ஊழியர்களுடன் இணைந்து நானும் தலைமைத்துவ பயிற்சி கொடுக்க தேவன் கிருபை பாராட்டினார்.

**மார்ச் மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்**

- பணித்தள மண்டல செயலர்களுக்கான கூடுகை மார்ச் 1 மற்றும் 2ஆம் தேதிகளில் ஜான்சி நகரில் நடைபெற உள்ளது.
- திருமணமாகாத மிஷனெரிகளுக்கான கூடுகை மார்ச் 3 மற்றும் 4ஆம் தேதிகளில் ஜான்சி ஊழியர் பயிற்சி மையத்தில் நடைபெற இருக்கிறது.
- நவஜீவன் ஊழிய ஸ்தாபனத்தின் நிர்வாகக் குழு கூடுகை மார்ச் 8ஆம் தேதி நடைபெற உள்ளது.
- வடமேற்கு பணித்தள ஊழியர்களின் ஆவிக்குரிய கூடுகை டேராடூன் நகரில் மார்ச் 10 முதல் 13 வரை நடைபெறவிருக்கிறது.
- தேவனுக்குச் சித்தமானால் மார்ச் 15 மற்றும் 16ஆம் தேதிகளில் ஈரோடு, பவானி நகரில் பல்வேறு முன்னேற்றப்பணி கூடுகைகளில் செய்தி கொடுக்க ஆயத்தப்படுகிறேன்.
- டிவிஷனல் செயலர்களின் ஜெபம் மற்றும் திட்டக்கூடுகை பெங்களூர் நகரில் வரும் 18 முதல் 20ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.
- தேன்கனிக்கோட்டை திருச்சபைகளின் பொதுக்குழு கூட்டம் வரும் 22ஆம் தேதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- ஒன்றிணைந்த கிறிஸ்தவ ஜெபம் மற்றும் ஆலோசனை சங்கத்தின் கூடுகை பெங்களூரில் வரும் 24 முதல் 27 வரை நடைபெறவுள்ளது.
- பெத்தேல் விவசாய ஐக்கியத்தின் நிர்வாக கூடுகை வரும் 28ஆம் தேதி டேனிஷ்பேட், பெத்தேலில் நடைபெறவிருக்கிறது.

**புதிய பொதுச் செயலர் தேர்வு:** வரும் மார்ச் 31ஆம் தேதி இயக்கத்தின் பொது செயலராக என்னுடைய பணி நிறைவு பெறுவதால், தற்போது தென்னிந்திய முன்னேற்றப்பணி செயலராக பணி யாற்றிக் கொண்டிருக்கும் அருள்திரு. விஜய் பி. ஐசக் அவர்களை புதிய பொது செயலராக இயக்கம் தேர்ந்தெடுத்து இருக்கிறது. அருள்திரு. விஜய் அவர் களைப் பற்றிய குறிப்பு இந்த இதழின் உட்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. நமது புதிய பொதுச் செயலரை இயக்கம் மனபூர்வமாக வரவேற்கிறது. மேலும் தேவ திட்டத்தினை நிறைவேற்ற தேவன் அவரை பயன்படுத்த தினமும் ஜெபிக்க உங்களை வேண்டுகிறேன்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களுக்கு ஆதரவாக இருந்த உங்களுக்கு மனப்பூர்வமாக நன்றி கூறி என்னுடைய இந்த இறுதி தலையங்கத்தை முடிக்கிறேன். சந்திக்கப்படாத இப்பெரும் தேசத்தை சுவிசேஷத்தினால் சந்திக்க நம் பயணத்தை தொடர்வோமாக!

கிறிஸ்துவின் ஊழிய பயணத்தில் உடன் நடப்பவன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**



# கீழ்ப்படிதல்

கீழ்ப்படிதல் என்ற பதத்திற்கு மெரியம் வெப்ஸ்டர் சொல் அகராதியில் ஒரு செயல் அல்லது நிகழ்வு என பொருள்படும் என்று எழுதப்பட்டுள்ளது.

கீழ்ப்படிதல் என்பது சமூகத்திலுள்ள விதிகள் மற்றும் சட்டங்களை மரியாதைக் குரியதாகவும், கவனமாகவும் கடைபிடிக்கும் ஓர் நன்னடத்தை.

கீழ்ப்படிதல் என்பது ஒரு நல்லொழுக்கம். அது நம் வாழ்வின் ஒரு பகுதியாக மாறும் வரை நடைமுறையில் கடைபிடிப்பது அவ்வளவு எளிதானது அல்ல. கீழ்ப்படிதல் மூலம் ஒரு குடும்பம் இணக்கமாக வாழவும், சிறந்த வாழ்க்கைக்கான இராணுவம், காவல்துறை, சிவில், சமூகம் போன்ற அமைப்புகள் ஒருங்கிணைந்து முழுமை யாய் வளரவும், அதன் நோக்கங்களை அடையவும் உதவுகிறது.

இது பல ஆன்மீக ஒழுக்கங்களில் ஒன்றாகும். ஒரு மனிதன் தனது மனைவியும், குழந்தைகளும் தனக்கு கீழ்ப்படிய வேண்டும் என எதிர்பார்க்கிறார் (எபே. 5). ஒரு தலைவர் தனது துணை அதிகாரிகள் தனக்கு கீழ்ப்படிவர் என எதிர் பார்க்கிறார். வேதாகம ரீதியாக தேவன் தனது படைப்பாகிய மனிதகுலம் ஆரோக்கிய மான வாழ்க்கைக்கான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என கட்டளையிட்டார். இரண்டாவது உலக வீரரான ஆர்தர் வாலிஸ் மிஷனெரியாக மாறிய பின்னர் கூறுகிறார் “ஒரு சிப்பாயின் முதல் கடமை கீழ்ப்படிதல் என்றும், இரண்டாவது கீழ்ப்படிதல், மூன்றாவது கூட கீழ்ப்படிதல்”.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவும் அதன் பல நெறிமுறைகளில் ஒன்றாக கீழ்ப்படிதலைக் கொண்டுள்ளது. இந்த இயக்கம் அதன் அனைத்து உறுப்பினர்களையும், முழுநேர மற்றும் தன்னார்வலர்களையும் நம்முடைய இறைவனும், எஜமானருமான இயேசு கிறிஸ்துவுக்கும், அவரது கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

கீழ்ப்படிதலுக்கு இயேசு கிறிஸ்து ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, ஒருவரும் அதை புறக்கணிக்க முடியாது.

## குழந்தைப் பருவத்தில்

இயேசு தனது வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிந்தார். ஒருமுறை அவர் எருசலேம் தேவாலயத்தில் தங்கி, தேவாலயத்தின் போதகர்களுடன் கலந்து ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார். பெற்றோர் அதை அறியா திருந்தனர். பெற்றோர் அவரைத் தேடி திரும்பி வந்து கடிந்துகொண்டபோது அவர் அவர்களுடன் இணங்கி நாசரேத்துக்கு வந்து அவர்களுக்கு **கீழ்ப்படிந்திருந்தார்** (லூக். 2:51).

## ஊழியத்தில்

இயேசு தனது வாழ்க்கையில் ஒரு தச்சராகவும், தேவனுடைய குமாரனா கவும், தம்முடைய பரலோகத் தகப்பனின் சித்தத்தை நிறைவேற்ற கீழ்ப்படிந்தார். நமது மனப்பூர்வ சமர்ப்பணம் நம்முடைய

இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து பாராட்டுக்களைப் பெறுவதுடன், உள் மனதில் “கர்த்தரில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது” (ரோ. 8:28) என்ற வசனத்தை நினைவில் கொள்வதிலும் திருப்தியடைகிறது.

இயேசு, ஒரு சாத்தியமான அச்சுறுத்த லாகக் கருதப்பட்டபோதும் கூட மற்றவர்கள் கூறுகின்ற கருத்துக்களைக் கவனிக்காமல் மக்களுக்கு நன்மையை செய்வதில் மும்முரமாக இருந்தார். அவரது கண்கள் எப்போதும் பிதாவாகிய தேவன் மீது நோக்கமாயிருந்தது. அவர் எப்போதும் தனது தந்தையின் அறிவுறுத்துதலைப் பின்பற்றினார். “மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிற தெதுவோ, அதையேயன்றி, வேறொன் றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்” (யோ. 5:19).

## தனிப்பட்ட வாழ்வில்

இயேசு ஒருபோதும் பிரபலமடைய வேண்டுமென்று விரும்பவில்லை. அவர் பிதாவுக்கு கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய சீடர்களுக்கு அவர் எதையும் மறைக்க வில்லை. அவரது போதனைகள் கலப்படமில்லாமலிருந்தது. அவரிடம் மறைவான திட்டங்கள் ஒருபோதும் இருந்ததில்லை. அவருடைய வாழ்க்கை முழுவதும் வெளிப்படைத்தன்மையால் நிறைந்திருந்தது. “... ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடு வாசம்பண்ணுவோம்” யோ. 14:23.

## பாடுகளில்

கெத்செமனேத் தோட்டத்தில் இயேசுவின் ஜெபம் நமக்கு மாதிரியைக் கற்றுக் கொடுக்கிறது என்கிறார் கேத்ரின் மார்ஷல். இயேசு சிலுவையை தவிர்த்திருக்கக் கூடும். கடைசி முறையாக அவர் எருசலேம் போகாமலிருந்திருக்கலாம். அவர் ஆசாரியர்களோடு ஒப்புரவாகி, காய்பாவுடன் பேரம் பேசியிருக்கலாம். அவர் யூதாஸோடு கலந்துரையாடி இப்பூமிக்குரிய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு முயன்றிருக்கலாம். பிலாத்து தன்னை விடுதலை செய்யும்படி அவரிடம் கெஞ்சியிருக்கலாம். கெத்செ மனேத் தோட்டத்தில் இயேசு கிறிஸ்து தப்பிச்செல்ல சமயம் வாய்த்தபோதிலும் தேவனுடைய சித்தம் நிறைவேற தன் சுயவிருப்பத்தை புறக்கணித்தார். இதுதான் கீழ்ப்படிதல். கடினமான சூழ்நிலைகள் மத்தியிலும் உன்னத பெலனைப்பெற்று ஆண்டவரின் விருப்பம் நிறைவேற நம்மை அனுமதிப்பதுதான் கீழ்ப்படிதல்.

## உபத்திரவங்களை கையாளுதலில்

இயேசு ஒருபோதும் பதிலடிக்கொடுக்க முயற்சிக்கவில்லை. தன்னை துன்புறுத்து வோரின் கைகளில் அமைதியோடு தன்னை ஒப்புக்கொடுத்தார். அவர்களுடைய பாவங் களை மன்னிக்க அவருக்கு மகத்தானத் தன்மை இருந்தது. அதிகாரத்தில் உள்ளவர்களைப்போல தன் தந்தை தனக்கு தந்திருந்த அதிகாரத்தை அவர் பயன்படுத்த முயற்சிக்கவில்லை, அதிகாரி களுக்கு முன்பாக நின்றபோது தன்னு டைய வல்லமையை அவர் காட்டவில்லை, அவர்களை பயமுறுத்தவுமில்லை. அனுதினமும் அதிகாலையில் அவர் பிதாவோடு செலவழித்த நெருக்கமான உறவின் மூலம் பழிவாங்கும் எண்ணமின்றி அமைதியாகவே இருந்தார். ‘‘ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்” (ரோ. 5:19). ஊழியம் நன்றாக வளர்ந்து

வரும் வேளையில் வேறு ஒரு வறட்சியான பணித்தளத்திற்கு மாற்றப்படும்போது, அது ஒரு அநீதியாக ஊழியருக்குத் தோன்றும். ஆகினும் நம்முடைய சிருஷ்டி கர்த்தரை நாம் நோக்கிப்பார்க்கும் போது, நம்முடைய தலைவர்களின் அதிகாரத்திற்கு கீழ்ப்படிய தேவன் நமக்கு உதவி செய்கிறார். அநேக வேளைகளில் நம்முடன் பணிசெய்கிறவர்கள் பணியில் உயர்த்தப்படும்போது அது ஒரு பாரபட்சமாக தோன்றலாம். சூழ்நிலை எதுவாகயிருப்பினும் நாம் எப்போதும் வேத வார்த்தையை ஆதாரமாகக்கொண்டு, சவால்களையும், நஷ்டங்களையும் பொறுப்படுத்தாமல், சலுகைகளையும், நன்மைகளையும் கணக்கிடாமல் தேவனின் இறுதிக்கட்டளைக்கு கீழ்ப்படிந்து நற்செய்தி அறிவிக்க வேண்டும்.

நாம் இந்த தபசு நாட்களில் தேவனுடைய குமாரன் கல்வாரி சிலுவையில் நமக்காக சகித்த துன்பங்களைத் தியானித்து அவரைப் பின்பற்ற முயற்சிப்போம். அவருக்கே எல்லா மகிமையும், கனமும், மாட்சிமையும் உண்டாகட்டும்!

*அன்பு என்னும் மின்னோட்டமே*
*எஜமான் கட்டளையின் அடிப்படை*
*நற்செய்தியில் இயேசு விளக்குவது*
*கீழ்ப்படிதல் சீஷனின் அடையாளம் என*

*கீழ்ப்படிதல் கணக்கிடப்பட*
*நேர கடைப்பிடிப்பு முக்கியமே*
*கீழ்ப்படிதலில் தாமதமில்லை*
*எப்போதும் கர்த்தரின் பார்வையில்*

*இரண்டு மகன்களின் உவமையில்*
*மூத்தவன் செயலை இயேசு பாராட்டுகிறார்*
*பிந்தையவனின் தயக்கத்தை புறக்கணித்து*
*முந்தையவனின் விருப்பமே நலம் என.*

**திருமதி. மேகலைச்செல்வி**
(ஓய்வு மிஷனெரி)

## மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவர்கள், மிஷனெரிகள் மற்றும் ஜெபக்குழு அங்கத்தினர்களுக்கு,

FMPBயின் புதிய பொதுகாரியதரிசியாக அருள்திரு. விஜய் பி. ஐசக்-ஐ ஒருமனதாக தேர்வு செய்ய செயற்குழுவிற்கு உதவி செய்ததற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். தற்போதைய பொதுகாரியதரிசியான அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களின் பதவிக்காலம் முடிவடைந்ததும், ஏப்ரல் 1, 2025 முதல் FMPB பொது செயலராக அருள்திரு. விஜய் பி. ஐசக் பொறுப்பேற்பார்.

FMPB என்பது தேவனின் அன்பால் தேசத்தை சந்திக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட தேவனின் இயக்கம். கர்த்தர் நம்மோடிருந்து நம்மை வழிநடத்திச் செல்வார் என்று மகிழச்சியடைகிறோம். உங்கள் தொடர் ஜெபத்தையும், ஆதரவையும் எதிர்பார்க்கிறோம். தேவன் உங்களையும், நமது இயக்கத்தையும் ஆசீர்வதிப்பாராக!

அன்புடன்,
**திரு. ஜாண் சாமுவேல்,**
தலைவர், FMPB

# புதிய பொதுச் செயலாளரை

## அன்புடன் இதயபூர்வமாக வரவேற்கிறோம்



அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக் அவர்கள் கர்நாடகா மாநிலம் பெங்களூரைச் சேர்ந்த திரு. D. விக்டர் ஐசக் & திருமதி. தங்கம் ஐசக் ஆகியோரின் மகனாவார். தன் இளம் வயதில் தந்தையை இழந்ததால் தன் தாயாரால் கிறிஸ்துவுக்குள் வளர்க்கப்பட்டார். இவரது தாயார் ஒரு ஜெப வீராங்கணை. இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஜெபக்குழுத் தலைவியாகவும், மிஷனெரி பணிக்காக தாராளமாய் கொடுத்து இவ்வூழியத்தை ஆதரித்தும் வந்தார். இவர் தன் மகனை தெய்வ பயத்திலும், தேவ வார்த்தையிலும், மிஷனெரி பணிக்கான ஆழமான அர்ப்பணிப்பிலும் ஜெபத்துடன் வளர்த்து வந்தார். அருள்திரு. விஜய் பி. ஐசக் அவர்கள் பெங்களூரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திரு. ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணனின் செய்தி மூலம் தன்னை தேவனுடைய பணிக்காக அர்ப்பணித்தார். இயக்கத்தின் முதல் மிஷனெரியான அருள்திரு. D. ஹரீஸ் ஹில்டன் அவர்கள் தனது ஆவிக்குரிய மகனாக, இந்தியாவில் தேவனின் இறுதிக்கட்டளையை நிறைவேற்றுவதற்கான தரிசனத்தையும், பாரத்தையும் இவருக்குள் ஊட்டினார். பின்னர் திரு. ஜோதிநாதன் மற்றும் பிற ஜெபக்குழு தலைவர்களுடன் இணைந்து முன்னேற்றப்பணி ஊழியத்தில் தீவிரமாக ஈடுபட்டார். அதன்பின் வடஇந்தியாவில் OM என்ற இயக்கத்தில் பணிசெய்தபோது மிஷனெரிப் பணிக்கான இவரது அழைப்பு உறுதிபடுத்தப்பட்டது. செராம்பூர் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட தென்னிந்திய வேதாகம கல்லூரியில் சேர்ந்து, 1991இல் இறையியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். பிரசங்கித்தல், பயிற்சியளித்தல், உருவாக்குதல் மற்றும் மிஷன் மீதான ஆர்வம் ஆகியவற்றில் தன் திறன்களை வளர்த்துக்கொண்டார். விரிவுப்பணி செயலரான அருள்திரு. ஜி. சுப்புராம் ராபர்ட் அவர்களின் மூலம் நம் இயக்கத்தில் மிஷனெரியாக சேர இவர் ஊக்குவிக்கப்பட்டார். தேவனின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, 1991இல்

இவ்வியக்கத்தில் இணைந்து கலாச்சாரம் கடந்த மிஷனெரியாக தன் ஊழிய பயணத்தை குஜராத்தில் தொடங்கினார். பின்னர் இயக்கத்தின் தேவை காரணமாக கர்நாடகாவிலுள்ள சர்ச்-மிஷன் விரிவுப் பணியின் பொறுப்பேற்றார். 2004ஆம் ஆண்டு வட இந்திய திருச்சபையின் மூலம் குருத்துவ அபிஷேகம் பெற்றார்.

இவரது மனைவி திருமதி. அற்புதம் செல்வி, தூத்துக்குடியைச் சேர்ந்த நமது மூத்த மிஷனெரிகளான மறைந்த திரு. எபன் அசரியா & திருமதி. ஞானம் அசரியா ஆகியோரின் நான்காவது மகள் ஆவார். அவர்கள் தங்கள் போஸ்ட் மாஸ்டர் மற்றும் ஆசிரியர் பணிகளை ராஜினாமா செய்து, குடும்பத்துடன் உத்தரப்பிரதேசத்தின் பஸ்தி & கோண்டாவில் மிஷனெரிகளாக பணியாற்றினார்கள். பின்னர் டெல்லி மற்றும் பஞ்சாபில் பணி செய்த இவர்கள் வடமேற்கு மண்டலத்திற்கான முன்னோடி ஒருங்கிணைப்பாளராக இருந்தார்கள். ஜம்மு உட்பட பல புதிய பணித்தளங்களை உருவாக்கினார்கள். மிஷனெரி குடும்பத்தில் பிறந்த திருமதி. அற்புதம் செல்வி FMPB நெறிமுறைகளுடன் பணித்தள சூழலில் வளர்க்கப்பட்டார். தனது பெற்றோரின் ஆவிக்குரிய வாழ்க்கை மற்றும் ஊழியத்தை நேரில் பார்த்த இவர் தானும் தேவ ஊழியத்தை செய்ய வேண்டுமென்று தன் வாழ்க்கையை முழுநேரப்பணிக்கென அர்ப்பணித்தார். ஜான்சி மற்றும் அலகாபாத்தில் தனது பள்ளிப் படிப்பை முடித்தப்பின் OM இயக்கத்தில் இணைந்து ஊழியம் செய்தார். தென்னிந்திய வேதாகம கல்லூரி யில் சேர்ந்து, 1994இல் இறையியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.

இயேசுவின் மீதான தொலைநோக்கு, அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்தைப் பகிர்ந்துகொண்ட இவர்கள் மே 22, 1995 அன்று திருமணம் செய்துகொண்டனர். இவர்களது மகள் லேமுவேலா சாட்சி, தற்போது வேலூரிலுள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் இளங்கலை தொழில் சிகிச்சை (BOT) 4ஆம் ஆண்டு பயின்று வருகிறார்.

கர்நாடகாவில் சர்ச்-மிஷன் விரிவுப்பணி ஊழியத்திற்குப் பிறகு, இயக்கத்தின் உதவியுடன் புனேயிலுள்ள யூனியன் பைபிள் செமினரியில் B.D. படிப்பை முடித்தார். மேலும் 2010இல் M.Div. பட்டம் பெற்றார். அதன்பின் நமது தலைமை அலுவலகத்தில் பணியாற்ற அழைக்கப்பட்டனர். பொது காரியதரிசியின் தனிபட்ட செயலர், தலைமையக செயலர், நிர்வாக செயலர், சர்ச் மிஷன் உறவுகள் கூட்டாண்மை, தொழில் முனைவோர் கூடுகை, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் தென்னிந்தியாவின் முன்னேற்றப்பணி துறை செயலர் என கடந்த 33 ஆண்டு களாக இவ்வியக்கத்தில் கொடுக்கப்பட்ட அனைத்து பொறுப்புகளையும் நேர்மை யுடனும், பணிவுடனும் தேவனின் மகிமைக் காக உண்மையுடன் நிறைவேற்றினார். இவர் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டு, டாக்டர். சாமுவேல் கமலேசன் போன்ற தலைவர்களால் உருவாக்கப்பட்டு, இயக்கத்தில் பல பொறுப்புகளை அளித்து ஆசீர்வாதமாகப் பயன்படுத்தி வருகிறார்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 11வது பொதுச் செயலராக உங்கள் புதிய பொறுப்புக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்! இவ்வியக்கத்தை கர்த்தர் காட்டும் வழியில் நடத்த தேவன் உங்களுக்கு ஞானம், பெலன் மற்றும் வழிகாட்டுதல் அருளி ஆசீர்வதிக்க வாழ்த்துகிறோம்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குடும்பம்.**

# தேசிய திட்டக் கூடுகை 2025




நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தேசிய திட்டக் கூடுகை சென்னை குருகுல வேதாகம கல்லூரி வளாகத்தில் உள்ள மண்டபத்தில் பிப்ரவரி 7, 8, 9ஆம் தேதிகளில் நடைபெற்றது. ஆயிரம் மிஷனெரிகளை எழுப்புதல், பணித்தளங்களை விரிவாக்குதல் மற்றும் ஜெபக்குழுக்களை பன்மடங்காக்குதல் என்ற நோக்கங்களைக் கொண்டு இந்த கூடுகை நடத்தப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து முழுநேர ஊழியர்கள், கௌரவ முன்னேற்றப்பணி தலைவர்கள், ஜெபக்குழு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் உட்பட 312 பேர் இத்திட்டக் கூடுகையில் பங்குபெற்றனர்.

திட்டக் கூடுகையின் முதல்நாள் 7ஆம் தேதி அன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை 11 மணி நேர உபவாச ஜெபம் அனுசரிக்கப்பட்டது. சுமார் 150 பேர் இந்த உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டு தேசத்தின் பல்வேறு ஊழியங்களுக்காக, ஆசீர்வாதங்களுக்காக, திட்டக் கூடுகையின் வெற்றிக்காக ஜெபித்தனர். இந்திய அருட்பணி இயக்கத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற கனம் ஜெயபால் சித்தர் அவர்கள் தேவ செய்தி அளித்தார்.

இந்த கூடுகையில் இயக்கத்தின் பொது செயலர், அவர் பணியாற்றிய நான்கு வருட ஊழிய பயணத்தில் தேவனின் உண்மைத்துவம் மற்றும் வழிநடத்துதல்களைப் பற்றி அவருடைய ஊழிய அறிக்கையில் விரிவாக எடுத்துரைத்தார். இயக்கத்தின் பொருளாளர் 2025-26ஆம் ஆண்டின் 5.88லிருந்து 7.5 சதவீதமாக உயர்த்திய அங்கீகரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தார். மேலும் உபத்திரவங்களின் மத்தியில் தேவன் செய்த ஏராளமான அற்புத காரியங்களை மண்டல மற்றும் டிவிஷனல் செயலர்கள் ஜெப நேரத்தில் பகிர்ந்துகொண்டனர்.

பிப். 8ஆம் தேதி சென்னை கௌரவ முன்னேற்றப்பணி செயலர் திரு. இம்மானுவேல் தலைமையில் வாலிபர்கள் மற்றும் மிஷனெரிகளின் பிள்ளைகள் நடத்திய துதி ஆராதனையுடன் இரண்டாவது நாள் கூடுகை தொடங்கியது. அநேக ஆங்கிலம், இந்தி மற்றும் தமிழ் பாடல்களைப்பாடி தேவனை ஆராதித்தனர்.



இயக்கத்தின் தலைவர் திரு. ஜாண் சாமுவேல் அவர்கள் தலைமை வகித்து திட்டக் கூடுகைக்கான முக்கிய குறிப்பு செய்திகளை அறிவித்தார். தேவனின் பாரத்தைப் பகிர்ந்துகொள்வது மற்றும் தேவனுடனான நெருக்கத்தைப் பேணுவது என்பதைப் பற்றி, உலக தரிசன ஸ்தாபனத்தின் முன்னாள் இயக்குனர் திரு. ஜெயக்குமார் கிறிஸ்டியன் அவர்கள் செய்தி அளித்தார்.




சந்தால், மால்டோ மற்றும் டுங்ரா பீல் இன மக்களைப் பற்றிய குறும்படங்களுடன் ஊழியத்தின் தற்போதைய நிலைமை பற்றிய விபரங்கள் படக்காட்சிகளாக ஒளிபரப்பப்பட்டன.

**கீழ் காணும் சிறப்பு அழைப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்:**

திரு. சில்வெஸ்டர் ராஜசேகர் – அமெரிக்க ஐக்கிய நாடுகள்
திரு. சிஜு தாமஸ் – ADF தேசிய இயக்குனர்
திரு. வில்பிரட் டேவிதார் – ஓய்வு பெற்ற மாவட்ட ஆட்சியர் ஆகியோர் தங்களது சிறப்புத் துறைகளின் அடிப்படையில் மிஷனெரிகளுக்கு ஊக்கம் தந்து போதித்தனர்.

அதனைத் தொடர்ந்து டிவிஷனல் செயலர்கள் தங்களுடைய பணி அறிக்கையை சமர்ப்பித்ததுடன் தேவனுடைய மகத்துவமான செயலுக்காக அனைவரும் தேவனைத் துதித்து மகிமைப்படுத்தினர். அதன் பின்னர் ஊழிய திட்டங்களின் வழிமுறைகள் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்க, பங்கு பெற்றோர் பத்து குழுக்களாக பிரிக்கப்பட்டனர்.

பிப். 9ஆம் தேதி நற்கருணை ஆராதனையுடன் கூட்டம் தொடங்கியது. கனம் ஐசக் ராஜா அவர்கள் குழுவினர் நற்கருணை ஆராதனையை நடத்தித் தந்தார்கள். அதனைத் தொடர்ந்து சுவிசேஷத்திற்காக 32 நாட்கள் சிறைவாசமிருந்த மிஷனெரி கிருஷ்ண குமார் தனது வல்லமையான சாட்சியை பகிர்ந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டிருந்த பத்து குழுக்களின் தலைவர்களும் தங்கள் குழுவினரின் புரிந்து கொள்ளுதலையும், எதிர்பார்ப்புகளையும் பகிர்ந்துகொண்டனர். இந்த கேள்வி–பதில் நேரமானது பங்குபெற்றோரின் ஆழமான அர்ப்பணிப்பையும், ஊழியத்தின் மீதுள்ள கரிசனையையும் வெளிப்படுத்தியது.

அதன் பிறகு இயக்கத்தின் பொது செயலர் அவர்கள் வரும் வருடத்தில் செய்யவிருக்கிற காரியங்களை கூறி பங்குபெற்றோரை தங்களுடைய தரிசனத்தில் புதிதாக்கப்பட்டவர்களாக இருக்க உற்சாகப்படுத்தி, திட்டக் கூடுகையின் நோக்கங்களோடு அவர்களின் எண்ணங்களை ஒன்றிணைத்தார்.

இறுதியாக அர்ப்பணிப்பின் ஜெபம் இயக்கத்தின் உப–தலைவர் திரு. சாம் பொன்னையா அவர்களால் ஏறெடுக்கப்பட்டது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தேவனுடைய இயக்கம் என்ற தலைப்பிலும், அழைக்கப்பட்ட அழைப்பிலும், இயக்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதிலும் நிலைத்திருத்தல் என்ற தலைப்பிலும் இயக்கத்தின் தலைவர் திரு. ஜாண் சாமுவேல் அவர்கள் செய்தியளித்தார்.

இறுதியாக பங்குபெற்றோர், செயலாற்றியோர் அனைவருக்கும் நன்றி நவிழ்ந்து இயக்கத்தின் பொது செயலர் கனம் ஜாண் பெர்லின் அவர்கள் ஜெபம் ஏறெடுக்க கூடுகை இனிதே நிறைவு பெற்றது.

இந்த தேசிய திட்டக் கூடுகையின் வெற்றிக்காக பணியாற்றிய அனைத்து ஜெபக்குழு தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், தலைமைச் செயலக ஊழியர்கள் யாவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி தெரிவிக்கின்றோம்.



**அருள்திரு. அறிவர். ஜெ.ஜெ. ஹாரீஸ்,**
செயலர், தலைமை செயலகம்.

# அழகிய சங்கமம் 2025

"அறுவடை நாயகரே ஒன்றாய் கூடிவந்தோம்
எத்தனை அழகு அல்லேலூயா
இது அழகிய சங்கமம் அல்லேலூயா"



இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இஸ்கேன் (சார்பு தேவைகளை சந்திப்போர் அணி) பிரிவின் மூலமாக நடத்தப்படும் அழகிய சங்கமம் இந்தாண்டு திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலிலுள்ள ஆபிரகாம் எஸ்தர் ஹாலில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. ஐந்து மாதங்கள் ஜெபித்து திட்டமிட்ட இச்சிறப்புக் கூடுகையில் 1,115 பேர் தங்கள் பெயர்களை பதிவு செய்து கலந்து கொண்டனர். தொழில் முனைவோர் திரளாக பங்குபெற்றனர். இதற்கென்று அமைப்புக்குழு தெரிவு செய்து திரு. சாலமோன் ராஜ்குமார் அவர்கள் கன்வீனராகவும், திரு. அருள் செல்வன் (சென்னை) நிதிக்காவலர் பொறுப்பையும், திரு. சாமுவேல் துரைசிங் (கோபி), திரு. தேவ ராஜ் (திருச்சி), திரு. மாதவன் ராஜ்குமார் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாகவும், திரு. ஆலன் தேவராஜ் (திருச்சி), திரு. வஜ்ரம் (சென்னை) மற்றும் ரெட்ஹில்ஸ் குழுவினர் பதிவு மற்றும் தங்குமிடத்தையும், திரு. ஜோன்ஸ் (ஆலங்குளம்) ஜெபக் குறிப்பு களை வாட்ஸ் ஆப் மூலம் அனுப்பும் பொறுப்பையும், திரு. எபின் லின்சன் (பம்மல்), திரு. ஐசக் அண்ணன், திரு. தனசிங் (தூத்துக்குடி) உணவு பொறுப்பையும், திரு. வெஸ்லி அவர்கள் குழுவினர் (திருச்சி) உணவு பறிமாறும் பொறுப்பையும், திரு. செல்லப்பா அண்ணன் (கொடைக் கானல்) திரு. ரூபன் மனோகர் (கொடைக் கானல்), திரு. ஜீவா அவர்கள் கூட்டம் நடத்து வதற்கு இடமும், தங்குவதற்கு அறைகளும் மற்றும் அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தனர். அருள்திரு. ஆல்பர்ட் சாமுவேல் அண்ணன் இரயிலில் வந்தவர் களை மற்றும் செய்தியாளர்களை அழைத்து வருவதில் உதவி செய்தார். திரு. கென்னடி தனபாலன் (கொடைக்கானல்), டாக்டர். ஐசக், டாக்டர். விஜிலா ஆகியோர் செய்த உதவிகள் ஏராளம்.



ஜனவரி 25ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு சரியாக திரு. தேவதாஸ் (திருச்சி) அவர்கள் ஜெபிக்க கூடுகை ஆரம்பிக்கப்பட்டு, மதுரை FMPB பாடல் குழுவினர் சிறப்பாக பாடல்களைப் பாடி ஆண்டவரை மகிமைப்படுத்தினர். திரு. டேவிட் பால் சுதன் (சென்னை) அவர்கள் குடும்பமாக கலந்துகொண்டு வந்திருந்த தொழில் முனைவோரை வேதம் சார்ந்த பல்வேறு

நிகழ்ச்சிகள் மூலம் உற்சாகப்படுத்தினார். நமது இயக்கத்தின் துணைத் தலைவர் திரு. சாம் பொன்னையா அவர்கள் இரண்டு நாட்கள் கூட்டங்களிலும் பங்கு பெற்றார். முதல் நாளில் இயக்கத்தின் கரிசனைகளையும், ஸ்கேன் பணிகளையும் சிறப்பாக எடுத்துக் கூறினார். இரண்டாம் நாள் காலை குடியரசு தின விழாவில் தேசிய கொடி ஏற்றி சிறப்பித்து கொடுத்தார்கள். சிறப்புச் செய்தி கொடுக்க வந்த சகோ. ஜி.பி.எஸ். ராபின்சன் அவர்களை தேவன் வல்லமை யாய் பயன்படுத்தி கூடியிருந்தவர்களை ஜெபிக்க பாரப்படுத்தினார்.

கூடியிருந்த மக்கள் தனி நபராக, குடும்பமாக, குழுவாக ஜெபிப்போம் என்று தீர்மானித்தனர். 26ஆம் தேதி காலை 6.15 மணிக்கு ஞாயிறு ஆராதனையில் திருவிருந்து பரிமாறப்பட்டது. அருள்திரு. டேனியல் தாமஸ் அவர்களும், நம்முடைய முன்னேற்றப்பணியில் உள்ள முழுநேர ஆயர்களும் ஆராதனையை நடத்தித் தந்தனர். அருள்திரு. டி. மணிமாறன் அவர்கள் **இரட்டிப்பான நன்மையைத் தருவேன்** என்ற தலைப்பில் தேவ வார்த்தையை பகிர்ந்துகொண்டார்கள். அதன்பின் தேசிய கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் பாடி, மரியாதை செலுத்தி ஜெபித்ததுடன் காலை ஆராதனை முடிவடைந்தது.

பிறகு சரியாக 8.45 மணிக்கு அழகிய சங்கமம் ஆரம்பித்து, நான்குபேர் கொண்ட கலந்தாய்வை திரு. சாமுவேல் துரைசிங் அவர்கள் நடத்திக்கொடுத்தார்கள். திரு. ஆலன் ஐசக், திரு. அலெக்ஸ், திருமதி. ஷகிலா ஜஸ்டின், திரு. சாலமோன் ராஜ்குமார் ஆகியோர் தங்கள் மேலான கருத்துக்களைப் பதிவு செய்தனர். அதன் பின்னர் திரு. மாதவன் ராஜ்குமார் அவர்களுடன் திரு. தங்கராஜ் (கோவை), திரு. கிளாட்சன் (நாகர்கோவில்) அவர்கள் கலந்தாய்வில் இதுவரை நாம் எப்படி இருக்கிறோம், எப்படி இருக்க வேண்டும் என்றும், தற்போதைய நாட்டு நிலவரங்களையும் அழகாக எடுத்து கூறினார்கள். சகோ. டேவிட் ஜேக்கப் (போரூர்) **தரிசனம்** 1000 என்ற திட்டத்தை



அழகாக அறிமுகம் செய்தார். ஆயிரம் முழுநேர மிஷனெரிகள் தமிழ் நாட்டிலிருந்து எழும்ப வேண்டும் என்ற பாரத்தை பகிர்ந்துகொண்டார். திரு. வினு அவர்கள் தான் மிஷனெரியாக சென்றதினால் தேவன் தன்னை பயன்படுத்திய விதத்தையும், நிகழ்த்திய அற்புதங்களையும் கூறி, நீங்களும் உங்களை தேவ பணிக்கென அர்ப்பணித்தால் ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்து பயன்படுத்துவார் என்ற தரிசனத்தை கூறினார். நிறைவாக செயல்படும் நேரம் மற்றும் இறுதி தேவ வார்த்தையை அருள்திரு. டி. பால் சாலமோன் அவர்கள் பகிர்ந்துகொண்டார். சங்கிலித் தொடர் ஜெபத்தை அருள்திரு. சி.ஆர். ஜார்ஜ், அருள்திரு. ஐசக் அவர்கள் நடத்தித்தந்தனர்.

இதன் விளைவாக தனிநபர் ஜெபம்-94, குடும்பம் ஜெபம்-48, புதிய ஸ்கேன் ஜெபக்குழுக்கள்-60, மிஷனெரிக்காக ஜெபம்-117, காணிக்கை ரூ.1,60,000 ஆகியவை தேவன் ஆசீர்வாதமாக தந்தார். நன்றி ஜெபத்துடன் கூடுகை சிறப்பாக நிறைவு பெற்றது. இந்த கூடுகை சிறப்பாக நடைபெற தங்கள் வளாகத்தைத் தந்து உதவிய டாக்டர். குரியன் ஆபிரகாம் அவர்களுக்கு மனதார நன்றி கூறுகிறோம். கூடுகையில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். தேவன் உங்களை ஆயிரமடங்கு ஆசீர்வாதத்தினால் நிரப்புவாராக! தேவனுக்கே மகிமை உண்டாவதாக!! ஆமென்!!!

கிறிஸ்துவின் பணியில்,

**அருள்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ்**




மார்ச் 8ஆம் தேதி உலக பெண்கள் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. அந்நாளில் பெண்களின் சாதனைகளும், வெற்றிகளும் பட்டிய லிடப்படுவதும், ஒளிப்பரப்பப்படுவதும் அவர்களை உற்சாகப்படுத்துவதோடு, அடுத்தத் தலைமுறையினரையும் ஈர்க்கக் கூடியதாக உள்ளது. அதேசமயம், இன்னொரு புறத்தில் பெண்கள் தங்களைத் தாங்களே சீரழித்துக் கொள்வதும், பிறரால் மிகவும் சிறுமைப்படுத்தப்படுவதும் அன்றாட செய்திகளாக பறிமாறப்பட்டு வருகிறது.

சத்திய வேதத்தில் கூறப்பட்டுள்ள பெண்கள் இந்த நவீன உலகத்தில் வாழும் அனைத்து தரத்து பெண்களுக்கு மாதிரியாகவும், உதாரணமாகவும் வாழ்ந்து காட்டியிருப்பது எத்தனை அருமை! பெண்களுக்கு அழியாத அலங்கரிப்பு என்ன என்பதை தெளிவாக வகைப்படுத்தும் பரி. பேதுரு, தன்னுடைய முதல் நிருபத்தில் 3:4,5இல் “**இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்**” என்கிறார்.

தங்களுடைய பார்வைக்கும் மற்றவர்களின் பார்வைக்கும் அழகாகத் தெரிவதற்காக, அலங்காரத்திற்காக பணம் மற்றும் நேரத்தை செலவு பண்ணும் அனைத்து வயது பெண்களுக்கும் வேதம் கற்றுக்கொடுக்கும் அழகுக் குறிப்பில் முக்கியமானது **கீழ்ப்படிதல்**. தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற இந்த அழகுசாதனம் பணத்தினாலோ, உலகப்பொருளினாலோ, மனிதர் மூலமாகவோ பெற முடியாது. ஆனால் தேவனோடு செலவிடும் நேரம் இந்த அலங்கரிப்பை நமக்குக் கொடுக்கிறது. கீழ்ப்படிதல் (Obedience), இணங்குதல் (Submission) ஆகிய இரண்டு வார்த்தைகளும் நிருபங்களில் மனித உறவுகளை முன்னிட்டு அதிகம் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. **கீழ்ப்படிதல்** என்பது மனிதர்களுக்கு முன்பாக நாம் வெளிப்படுத்தும் ஒரு செயலாக இருந்தாலும், **இணங்குதல்** என்பது உணர்வுப் பூர்வமாக நமக்கு இருக்கும் உறவின் அடிப்படையில் மரியாதையுடன் காட்டப்படும் குணமாகும். தேவனோடு நாம் கொண்டிருக்கும் தொடர்பும் அவரது வார்த்தையினால் நமக்குள் ஏற்படும்

மாற்றங்களும் கீழ்ப்படிதலையும், இணக்கத்தையும் வெளிக்காட்டுகின்றன.

ஏதேன் தோட்டத்தில் கீழ்ப்படியாமையினால் தொலைத்துவிட்ட தேவனோடுள்ள நெருங்கிய உறவை இந்த மனுக்குலம் மீண்டும் பெற்றுக்கொள்ள தேவன் தம் ஒரே பேரான குமாரனை அனுப்பிவைத்தாரே. பிலி. 2:7,8இன் படி **இயேசு கிறிஸ்து சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்** எனில் பெண்களாகிய நாம் நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் கீழ்ப்படிதலையும், தாழ்மையையும் பெற்றுக்கொள்வது எத்தனை அவசியம்!

இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில் பிதா அவருக்கு என்ன செய்யச் சொன்னாரோ, என்ன பேசச் சொன்னாரோ அதை மட்டுமே அவர் செய்ததாக யோவான் 5:30 & 7:16,17இல் வாசிக்கிறோம். அப்படியானால் அனுதின வாழ்வில் அவர் தேவனோடு கொண்டிருந்த நெருங்கிய தொடர்பு மரணபரியந்தம் கீழ்ப்படியும் குணத்தை அவருக்கு சாத்தியமாக்கிற்று. எனவே நாம் கீழ்ப்படிதலையும், இணங்குதலையும் கற்றுக்கொள்ள இயேசுவே நமக்கு முன்மாதிரியாக உள்ளார்.

எபே. 5:22இல் பரி. பவுல் மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்படியுங்கள் என கட்டளையிடுகிறார். ஏனெனில் குடும்பம் என்பது கர்த்தராகிய தேவன் ஏற்படுத்திய அமைப்பு. இந்த அமைப்பில் கணவனை குடும்பத்தின் தலைவராக வேதம் குறிப்பிடுகிறது. கணவன்-மனைவியின் சமத்துவம் பற்றி எத்தனையோ கருத்தரங்குகள், பட்டி மன்றங்கள் விவாதித்தாலும், தேவன் தந்திருக்கும் இந்த அமைப்பில் மனைவி கிறிஸ்துவிற்கு கீழ்ப்படிவதுபோல் கணவனுடன் இணக்கத்தோடு கீழ்ப்படிந்து வாழ வேண்டுமென வேதம் நமக்கு கற்றுத்தருகிறது. ஏனெனில் கணவன் மனைவி இருவரும் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டு, பரிசுத்தமாய் வாழ்ந்து கிறிஸ்தவ இல்லத்தை அமைக்க அழைக்கப்பட்டுள்ளார்கள். இப்படிப்பட்ட சூழல் நம் பிள்ளைகளும்கூட தேவ அன்பிலும், தேவ உறவிலும் வளருவதற்கு ஏதுவாகிறது.

நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதையும், ஒருவருக்கொருவர் இணக்கமாயிருப்பதையும் நாம் அப்பியாசப்படுத்தும்போது பொது வாழ்வில் நாம் கிறிஸ்துவை வெளிக்காட்ட ஏதுவாகிறது. தேவனுக்குக் கீழ்ப்படிந்து செயல்படும்போது அநேகருக்கு அவர் அன்பைக்கூறவும், அழிவினின்று மக்களை தப்புவிக்கவும் முடிகிறது. தேவையிலிருக்கும் மக்களைத் தேடிச்சென்று அவர்களது தேவைகளை சந்திக்க தேவன் நம்மை பயன்படுத்துகிறார். தேவனுக்கு கீழ்ப்படிந்ததினாலும், அவர் வார்த்தைக்கு இணக்கம் தெரிவித்ததாலும் மிஷனெரிகளாக பல்வேறு இன மக்களைத் தேடிச் செல்ல நம்மால் முடிந்திருக்கிறது. ஜெபக்குழு அங்கத்தினர்களாக, தலைவிகளாக, அனுப்புகிறவர்களாக, தாங்குகிறவர்களாக செயல்பட முடிகிறது அல்லவா!

பிரியமானவர்களே! கீழ்ப்படிதல், இணக்கம் என்ற அணிகலன்கள் தொடர்ந்து நம் வாழ்வை அலங்கரிக்க இடம் கொடுப்போம்.

***உங்கள் அனைவருக்கும்***
***பெண்கள் தின நல்வாழ்த்துக்கள்.***

**திருமதி. மணிசெல்வி சாரதி**
(பெண்கள் பிரிவு)

# சி.என்.ஐ. பொது காரியதரிசியுடன்

## ஓர் இனிய சந்திப்பு




நமது இயக்கத்தின் தலைவர் திரு. ஜாண் சாமுவேல் அவர்கள் சி.என்.ஐ.யின் பொது காரியதரிசியான மறைதிரு. டாக்டர். அஜித் குமார் அவர்களை டெல்லியிலுள்ள சி.என்.ஐ. பவனியில் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது வட இந்தியா முழுவதுமான சி.என்.ஐ. சபைகளுக்கும், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கும் இடையிலான ஒப்பந்தங்களை குறித்து கலந்துரையாடினார். இந்த ஒப்பந்தமானது வட இந்தியாவில் இயேசுவை அறியாத அநேக கிராமங்களை சுவிசேஷத்தினால் சந்திக்க மிகவும் உதவியாக இருக்கும். அதோடு சி.என்.ஐ. சபைகள் தங்கள் ஊழிய தரிசனங்களை விரிவாக்க அவர்களுக்கும் உதவியாக இருக்கும். தென்னகத்திலுள்ள ஐந்து மாநிலங்களைத் தவிர பிற அனைத்து மாநிலங்களும் இந்த சி.என்.ஐ.யின் கீழ் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.


## FORM IV

| | | |
|---|---|---|
| Place of Publication | : | 29, High School Road, Ambattur, Chennai - 53 |
| Periodicity | : | Monthly |
| Printer's Name | : | RASI GRAPHICS PRIVATE LIMITED |
| Nationality | : | Indian |
| Address | : | 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. |
| Publisher’s Name | : | S. John Berlin |
| Nationality | : | Indian |
| Address | : | FMPB - HEAD QUARTERS, 29, High School Road, Ambattur, Chennai - 600 053. Phone: 044-26570404 |
| Owner’s Name | : | Friends Missionary Prayer Band |

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 01.03.2025

Publisher
S. John Berlin

# பணித்தள விஜயம்



ஆண்டவரின் பெரிதான கிருபையால் ஈரோடு மாவட்டம் ஜெபத்தில் தாங்கும் ராஜஸ்தான் மாநிலத்திற்கு 34 பேர் கொண்ட குழுவாக 3.11.2024 அன்று ஆழ்வார் விடுதி சென்றடைய தேவன் கிருபை செய்தார். அன்று இரவு திருவிருந்து ஆராதனையில் பங்கு பெற்று, பணித்தள பகிர்வைக் கேட்க தேவன் உதவி செய்தார். 4.11.2024 அன்று தபுக்காடா மற்றும் ஆழ்வார் பணித்தளம் பார்வையிட்டு விசுவாசிகளின் அனுபவ சாட்சிகளை கேட்கக் தேவன் கிருபை செய்தார். பொது செயலர், பணித்தள இயக்குநர் மற்றும் மண்டல செயலர்களோடு இணைந்து ராஜஸ்தான் மாநில பொன்விழா கொண்டாட்டத்தில் பங்குபெற்றோம். ஆழ்வார் விடுதி மாணவர் திரு. ஜஷ்பால் அவர்களின் துதி ஆராதனை, எதிர்ப்புகள் மற்றும் ஊழிய சரித்திர பகிர்வு மிகவும் அருமையாக இருந்தது. 6.11.2024 அன்று மிஷனெரிகளோடு இணைந்து உபவாசித்து ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். தொடர்ந்து மிஷனெரிகளுக்காக ஜெபிப்போம், திருச்சபைகளை கட்டுவோம் என்ற தீர்மானத்தோடு நவம்பர் 10 அன்று ஈரோடு வந்தடைய தேவன் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**அருட்திரு. ஜாண் பெனின்,** விரிவுப்பணி செயலர் – ஈரோடு மாவட்டம்.

# ஆலயப் பிரதிஷ்டை



ஆண்டவருடைய அளவற்ற கிருபையால் 12.12.2024 அன்று மாலை பத்தல்காவ் சிறுமியர் விடுதியை பார்வையிடவும், ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். 13.12.2024 அன்று சத்தீஸ்கர் மாநிலம் சீத்தாப்பூர் பணித்தளம் கல்ஜிபா கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தை தேவ நாம மகிமைக்கென்று மங்களப் படைப்பு செய்தோம். ஆலயம் கட்ட ஜெபத்தோடு உதவி செய்த சகோ. சாம் வின்செண்ட் (ஆஸ்திரேலியா) அவர்களின் குடும்பத் தினருக்கு மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துதலையும் தெரிவித்து கொள்கிறோம். இந்த ஆலயப் பிரதிஷ்டையில் 200க்கும் அதிகமானோர் பங்கு பெற்று சிறப்பித்தனர். மறைதிரு. பாலமுருகன் மற்றும் திரு. முத்துக்குமார் குடும்பத் தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்!

**திரு. டி. ஆஸ்டின்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – கே.கே. நகர், சென்னை.

**மார்ச்**

**1**

**சனி**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. டிங்கு செமி, திரு. தல்சகாம் சுவாண்தக்
திருமதி. சுரபி பீரோ அசோக் நாயக்
திருமதி. இல்லா பமெய் செமி
திரு. பினோத் சம்பிரமரி
திரு. லுன்கிம் டோங்காம் கோங்சய்
திரு. டிட்டுங்பௌ K., திரு. ஜெய்பீர் சிங்
திரு. லெட்கோலுன் பய்தே
திருமதி. டிங்நய் நேங் சிங்சன்
திரு. தீஹே S., திரு. ஓம்பிரகாஷ் குப்தா
திரு. தாங்வான்சாங் G.
திரு. ஜம்கோன்காம் ஹயோகிப் L.
திருமதி. மார்கரெட் சிங் தாஸ்
திருமதி. ஹோய்ட்டின் மேட் லால்
திரு. நிங்தௌஜம் அலோன்சிங்

## ஜம்மு

### நௌஷேரா:

**ஷேக் சுபானி & எமி பாக்கியா**

**துதிக்க:** கடுமையான எதிர்ப்பின் மத்தியிலும் மக்கள் நற்செய்திக்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். பத்து வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்து வந்த ரூபிக்கும், ஆறு வருடங்களாக ஜெபித்து வந்த மம்தாவுக்கும் தேவன் புத்திர பாக்கியம் அருளி ஆசீர்வதித்தார். பிசாசின் பிடியிலிருந்து சவ்ராவுக்கு தேவன் விடுதலை அருளினார். 15 வருடங்களாக நரம்புத் தளர்ச்சியினால் அவதியுற்று வந்த போலி தேவிக்கு அற்புத சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகம் செயலிழந்து கஷ்டப்படும் பைசாகிராம் மற்றும் பத்து ஆண்டுகளாக அஜீரணப் பிரச்சனையால் கஷ்டப்படும் சாம்ராஜிக்கும் தேவன் சுகமருள; குடிப்பழக்கத்தினால் மனைவியை துன்புறுத்தும் பிரியாவின் கணவர் மனந்திரும்ப; குடும்பத்தைவிட்டு பிரிந்து வாழும் சஞ்சய் குடும்பத்துடன் சேர்ந்து வாழ; சபையின் அனைத்து காரியங்களிலும் பொறுப்பு வகித்த ஆர்த்தி சமுதாயத்தின் அச்சுறுத்தலினால் ஆலயத்திற்கு வர தயங்குகிறார். தேவன் அவருக்கு உதவி செய்ய ஜெபிப்போம்.

## ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்:

**தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** ஞாயிறு ஆராதனை நடத்த மிஷனெரி குடும்பம் சென்றுகொண்டிருந்த வேளையில் ஒரு வேன் அவர்களது இருசக்கர வாகனத்தின் மீது மோதி இருவரும் சாலையோரம் இருந்த பெரிய பள்ளத்தில் வாகனத்துடன் விழுந்த போதிலும் அதிகம் அடிபடாதபடி தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். சுதேச ஊழியர் பிரகாஷ் ஜாண் பயணம் செய்த வாகனம் பாறையில் மோதிய நிலையில் அற்புதமாய் காப்பாற்றப்பட்டார். மூச்சுத் திணறலினால் கஷ்டப்பட்ட தனது பேரனுக்காக விசுவாசி சித்ராதேவி ஜெபித்தபோது தேவன் பூரண சுகமருளினார். புதிய தொடர்பாளர்களைத் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது தாய் கிறிஸ்தவ கூட்டங்களுக்கு செல்வதை தீவிரமாக எதிர்க்கும் மகன் சத்தீஷ் மற்றும் இந்திராவின் குடும்பத்தினர் மனந்திரும்ப; ஊழியத்திற்கு இடையூறு விளைவிக்கும் மீனாராம் மற்றும் சுரஜ் மனந்திரும்ப; தீயோதி பகுதியில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; அரசாங்க தேர்வு எழுதும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.

மார்ச்
2
ஞாயிறு

## ஆனி:

### ஜின் சாவ்ம் & சிங் ஹோய்கிம்

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு நற்செய்தி கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. கோபின், ஜெஸ்வந்த், பிரேமா, தரம்தாஸ் ஆகியோரை புதிய தொடர்பாளர்ளாக தேவன் தந்துள்ளார். குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த மனீஷ் தனது குடும்பத்தினரின் ஊக்கமான ஜெபத்தினால் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று தேவ பக்தியில் வளர்ந்து வருகிறார். நீண்ட நாட்களாக சுகவீனத்திலிருந்த பாங்கு தேவி விசுவாசிகளின் ஜெபத்தினால் பூரண சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக சபைக்கு வரும் கோபின் உடல் அரிப்பிலிருந்து சுகம்பெற, ஜஷ்வந்த் பிசாசின் போராட்டத்திலிருந்து விடுப்பட, பிரேமா, சுஷ்மா, லக்ஷ்மி, சந்திரா, ரஜின்ஸ்ரீ ஆகியோருக்கு விசுவாசியான வாழ்க்கைத்துணை கிடைக்க; சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள கிராமங்களில் விரைவில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

## ரோஹ்ரு:

### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** டையோனி பகுதியில் ஒரு குடும்பமும், சௌரா பகுதியில் ஒரு குடும்பமும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். திருடனிடமிருந்து விசுவாசி நைருராம் வீட்டின் பொருட்கள் பாதுகாக்கப்பட்டது. வேலை செய்யுமிடத்தில் மின்சார தாக்குதல் ஏற்பட்டபோதும் அதிக பாதிப்பு ஏற்படாதபடி குஷாலை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி பிசாசின் பிடியினால் அலைகழிக்கப்பட்டு தங்கள் சரீரத்திற்கு பாதிப்பை உண்டாக்கிக்கொள்ளும் அக்கன்ஷா, முஸ்கான், கல்பனா ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைபெற; வயிற்றில் அதிகமாக சதை வளர்வதால் வயிற்று வலியினால் கஷ்டப்படும் நைருபாய்க்கு தேவன் அற்புத சுகமருள; அறுவை சிகிச்சையின் மூலம் கால் அகற்றப்பட்டுள்ள ஷியாம்லால் செயற்கைக் கால் உதவியுடன் விரைவில் நடந்து பழக ஜெபிப்போம்.

## ரிகாங்பியோ:

### சங்கர் ஏ. & ரூத் மேரி

**துதிக்க:** மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பஞ்ச்சந்தின் இதய துடிப்பு குறைந்துகொண்டே வந்த நிலையில் விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது பூரண சுகமடைந்து வீடுதிரும்பினார். நீலம் மற்றும் பூஜ்லுவின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி சிறப்பாக நடைபெற்றது. விபத்தில் சிக்கி காயமுற்ற திக்காராம் தேவ கிருபையால் குணமடைந்து வருகிறதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தவறாமல் ஆராதனையில் கலந்து கொண்டும் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட தயங்கும் பூணம், ரூபா, சீமா, ஆஷா, அஷ்வின், அவந்திகா, காக்மங், மாரீஸ்மான், ராஜு, அஜய் ஆகியோருக்கு தேவன் தைரியத்தின் ஆவியைத்தர; விசுவாசி சுனிதாவின் வீட்டிலுள்ள கன்றுக்குட்டி குருடாக பிறந்ததினால் 'சாபம்' என கூறும் கிராமத்தினர் மத்தியில் தேவன் கன்றுக் குட்டிக்கு கண்பார்வை அருளி அற்புதம் செய்ய ஜெபிப்போம்.

## மார்ச் 3 திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாண் சாமுவேல் A.
திரு. ஜீவன் ரஞ்சன் மஹாபத்ரா
திருமதி. பிரஸ்துதா பட்டி பானி
திருமதி. மெர்சி எலிசபெத் சிவசங்கரன்
திரு. தாங் சின் லியான் L.

### நேர்வா: எஸ். இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

**துதிக்க:** ஐந்து சபைகளில் உபவாச ஜெபம் நடத்திடவும், அநேக விசுவாசிகள் கூடி தேசத்திற்காக, மக்களுக்காக ஜெபிக்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் தவறாமல் ஆலய ஆராதனையில் பங்குபெறவும், வேத வசனங்களுக்கு கீழ்ப்படிந்து வாழவும்; புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பிற வழிபாடுகள் நமது ஊழியத்திற்கு தடையாக இராதபடி தேவன் காத்துக்கொள்ள; பரனு, பாங்கல் மற்றும் அட்டல் கிராம சபைகளில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; மிஷெனரி தம்பதியினருக்கு தேவன் புத்திரபாக்கியம் அருள ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### ஜைத்தோ:

### சித்தரஞ்சன் தாண்டி & தெஜஸ்விதா

**துதிக்க:** கைடிக் இன மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலை தந்துள்ளார். வாலிபர் மத்தியில் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டு, போதையின் அடிமைத்தனத்திலிருந்து வாலிபர்கள் விடுதலைபெற ஜெபம் ஏறெடுக்கப்பட்டு வருகிறது. போதைப் பொருட்கள் விநியோகம் செய்யும் ஜஷ்பால் சிங் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளார். புதிதாக இணைந்துள்ள சுதேச ஊழியர் சுரேந்தர் சிங்கிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த ஏழு ஆண்டுகளாக மனநோயினால் பாதிக்கப்பட்டு, தற்போது ஜெபத்திற்காக ஆலயத்திற்கு அழைத்து வரப்படும் அஜய் சிங் பூரண குணமடைய; புற்றுநோயினால் மரணமடைந்த மன்தீப்சிங் என்பவரது குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; பரம்ஜீத் சிங், ராஜு சிங் ஆகியோர் போதைப் பழக்கத்திலிருந்து விடுபட; கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாகும் சிந்தர் கௌர் குடும்பம் விசுவாசத்தில் வளர; அம்ரிஸ்டர் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊழியம் விருத்தியடைய ஜெபிப்போம்.

### மான்சா:

### தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** ஆறு பேர் புதிதாக ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். குருக்னி மற்றும் நாபா கிராமங்களில் முதன்முறையாக சத்சங் கூட்டங்கள் நடத்தவும், அநேகர் வாஞ்சையோடு சுவிசேஷத்தைக் கேட்கவும் தேவன் கிருபை செய்தார். பெண்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சர்கா, நங்கால், ரத்னாகர் ஆகிய கிராமங்களில் சத்சங் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற; புர்ஜி, பாஜ்வாலா, ஈஷாநகர் ஆகிய பகுதிகளில் திரையிடப்படவிருக்கும் படகாட்சி ஊழியத்தின் மூலம் அநேகர் கிறிஸ்துவை விசுவாசிக்க; நடத்தப்படவிருக்கும் ஆத்தும ஆதாயப்பயிற்சியில் விசுவாசிகளும், சபை மூப்பர்களும் உற்சாகத்தோடு கலந்துகொண்டு ஆத்தும பாரம் பெற்றிட; திருமணமாகி 10 வருடங்களாக குழந்தையின்றி தவிக்கும் புதியத் தொடர்பாளரான அமர்ஜித் சிங் குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள கணேஷ்ராம் மற்றும் சான்சிங் மீண்டும் தேவனுடன் ஐக்கியம் கொள்ள ஜெபிப்போம்.

மார்ச்
4
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் பெர்லின் S.
திரு. திம்மேஷ் M.P., திரு. கிஷாந்தா லிம்மா
திருமதி. பன்சூரி மொஹ்லின் பிதான்
திரு. தினேஷ் மரையா

## அஹ்மத்கட் மண்டி:

### கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா

**துதிக்க:** மூன்று கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். காச நோயினால் அவதிப்பட்டு வந்த ஆஷா தொடர் ஜெபத்தின் மூலம் படிப்படியாக குணமாகி வருகிறார். ஆட்டோவில் பயணம் செய்யும் போது ஏற்பட்ட விபத்தி லிருந்து விசுவாசி ரீனாவை காப்பாற்றிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜன்டால் மற்றும் தோல்தர் கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் உருவாக எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; நடத்தப்படவிருக்கும் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி, பெண்கள் கூடுகை, சபை மூப்பர் பயிற்சி ஆகியவை தடையின்றி நடைபெற; சபை மூப்பர் சந்த்லாலின் மாமியார் சுகவீனத்தி லிருந்தும், தினமும் காலை வலிப்பு நோயினால் கஷ்டப்படும் அவரது மகன் அலோக்கும் பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## பட்டிண்டா:

### சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா

**துதிக்க:** பூச்சோ மண்டி, பாய்ரூபா, மண்டி கலன் மற்றும் மௌர் மண்டி ஆகிய நான்கு கிராமங்களில் சத்சங் கூட்டங்கள் நடத்த தேவன் கிருபை செய்தார். வாலிபர்களுக்காக நடத்தப்பட்ட விசேஷித்த ஆலோசனைக் கூட்டம் மற்றும் பயிற்சி அநேகருக்கு ஆசீர் வாதமாக அமைந்தது. ஜெபத்தின் மூலம் ராஜாசிங் சிறுநீரக பிரச்சனையிலிருந்து சுகமானதால் ஆலயத்திற்கு வர துவங்கியுள்ளார். போதை மற்றும் பாவ பழக்கங்களுக்கு அடிமைப்பட்டிருந்த மோனி சிங்குக்கு தேவன் விடுதலை அருளினார். சபை மூப்பரான திருமதி. ராணி கௌர் மற்றும் திருமதி. சத்வீர் கௌர் பெண்கள் ஊழியத்தில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பணித்தள ஊழிய வளர்ச்சிக் காக அர்ப்பணமுள்ள சுதேச ஊழிய ரையும், தன்னார்வ ஊழியரையும் தேவன் தந்தருள; குடிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு குடும்பத்தின் சமாதானத் தைக் கெடுக்கும் கரண், இந்த்ரேஷ், குல் தீப் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; பாய்ரூபா மற்றும் பூச்சோ மண்டி கிராமங்களில் கட்டப்பட்டுவரும் ஆலயக் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிவடைய; நீரிழிவு நோயிலிருந்து லவ்பிரீத்தும், அசுத்தாவியின் பிடியி லிருந்து ராஜாசிங்கும் விடுதலைபெற; சுகவீனமாயிருக்கும் மிஷனெரியின் பெற்றோர்களுக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

மார்ச்
5
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தங்கம்மாள் ஜெபராஜ்
திரு. சுனில் மேத்யூ K., திரு. ரவி குமார் S.
திருமதி. ஸ்டெல்லா டேவிட் பெருமாள்
திரு. சம்புநாத் நாயக், திரு. லுபின் முர்மு

# உத்தராகண்ட்

## பாஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** பெரிய பூசாரியாக இருந்த வினோத் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். கெட்ட கனவுகளால் தூக்கமின்றி தவித்த சோஹானிக்கு ஆலயம் வந்து ஜெபித்தபின்நல்ல நித்திரையை தேவன் கட்டளையிட்டார். விசுவாசி சிவ்ராமுக்கு தாசில்தாராக அரசாங்க பணி கிடைத்துள்ளது. அடிக்கடி சுயநினைவிழந்து வந்த சுந்தரிக்கு தொடர் ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வயிற்றுப் புற்றுநோயிலிருந்து சையானாவுக்கும், இரத்தப் புற்றுநோயிலிருந்து சவிதாவுக்கும் தேவன் பூரண சுகமருள; இருதயத்தில் நீர்சேர்ந்து அவதியுற்று வரும் லக்ஷ்மனனை தேவன் குணப்படுத்த; மன அழுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பிரேம் ஜோஷி பூரண குணமடைய; தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் எவ்வித குழப்பமுமின்றி தைரியத்துடன் அறிக்கையிடவும், விசுவாசத்தில் வளரவும் ஜெபிப்போம்.

## கிச்சா: பிபாபா பானி & பித்திகா

**துதிக்க:** விசுவாசி ஆண்ட்ரூ & அமான் குடும்பம் ஊழியத்தில் உற்சாகத்துடன் உதவி செய்து வருகின்றனர். ஜெபத்தின் மூலம் நிஷாவுக்கு பக்கவாதத்திலிருந்து சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாந்திபுரா, பந்த்நகர், சக்திபார்ம், லால்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; குரு வணக்கத்தைவிட்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் கிராமத்தினரின் எதிர்ப்பை சந்திக்கும் நமது விசுவாசிகள் தேவனுக்குள் உறுதியாய் நிலைத்திருக்க; கிச்சா பணித்தளத்தில் ஆராதனை நடத்த ஏற்ற இடத்தை தேவன் தந்தருள; சுக்விந்தர் குடும்பத்தை குழந்தை பாக்கியத்தால் தேவன் ஆசீர்வதிக்க; விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு கல்வி கற்கும் வாய்ப்பை தேவன் உருவாக்கித்தர ஜெபிப்போம்.

## மல்தன்சோர்: ஷிஷூ பால் & அனிதா

**துதிக்க:** சேகர் சிங் மற்றும் தரம்பால் குடிப்பழக்கத்திலிருந்தும், பிட்டு, தீபா, அஞ்சல் ஆகியோர் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றனர்; பிரசாந்த் குடும்பத்தை குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை விசுவாசிப்போருக்கு இடையூறு விளைவித்து வரும் ஜோசிபுரா, நாராயண்பூர் கிராமத்தினர் உள்ளத்தில் தேவன் மாற்றத்தை ஏற்படுத்த; சுனிலா மற்றும் சர்வேசை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; பிந்தர்சிங் மற்றும் பல்தேவ் குடியின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற; காளிதாஸ், கன்டோ, பிரசாந்த், பூஜா, இந்தர்பால், மீனாக்ஷி, தர்மேந்தர், அனுராதா ஆகியோர் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை தைரியமாக அறிக்கை செய்ய; அனுராதா மற்றும் மீனாக்ஷிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; மிஷனெரி அனிதாவின் சிறுநீரகப் பிரச்சனையை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

மார்ச்
6
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. ஜேம்ஸ் அருள்ராஜ் M.

## தினேஷ்பூர்:

### சிவகுமார் & சுசிலா மராக்

**துதிக்க:** நான்கு கிராமங்களில் சுவிசேஷத் திற்கு தேவன் திறந்த வாசலை தந்தருளினார். அநேக நாட்களாக சுகவீனமாயிருந்த சீமா ஜெபத்தின் மூலம் சுகமடைந்தார். கால் வளைந்திருந்த விசுவாசி பவன் கீதாவின் குழந்தை தொடர் ஜெபத்தின் மூலம் கால் சரியாகி நடக்க ஆரம்பித்துள்ளது. சைட்லி கிராமத்தின் சூரஜ் என்ற விசுவாசி சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளரான தால்பூரா கிராமத்தைச் சேர்ந்த பரம்ஜீத் பக்கவாதத்தி லிருந்தும், கேடா கிராமத்தைச் சேர்ந்த விஷால் நுரையீரல் வீக்கத்திலிருந்தும், கேம்ப் 1-ஐ சேர்ந்த ஆஷிஷ் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் பரிபூரண சுகம்பெற; பிசாசின் பிடியில் சிக்கித் தவிக்கும் காம்பூரின் நிரஜ் கௌர் மற்றும் கேடாவின் சுவேதா விடுதலைப் பெற ஜெபிப்போம்.

# ஹரியானா

## பர்வாலா:

### மிண்டு குட்டும் & சுப்ராபாக்

**துதிக்க:** சத்சங் கூடுகை நடத்திடவும், மூன்று இடங்களில் சபை மூப்பர்கள் கூட்டம் நடத்திடவும் தேவன் கிருபை செய்தார். 17 வயது சஞ்சய் சந்தித்த மோசமான சாலை விபத்தில் எலும்பு முறிவின்றி தேவன் அவரை பாதுகாத்தார். காய்பிபூர் கிராமத்தில் நடத்தப்பட்ட வேதாகம போட்டிகளிலும், வருடாந்திர வாலிபர் முகாமிலும் அநேக வாலிபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். சானியானா கிராமத்தில் காசநோயினால் பாதிக்கப்பட்ட பூணம்க்கு மருத்துவ சிகிச்சை பலனளிக்காத நிலையில் ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கழுத்து மற்றும் கை, கால்களில் நரம்புப் பிரச்சனையினால் அவதியுற்று வரும் நரேஷ்க்கு தேவன் பூரண சுகமருள; புதிதாக ஆலயத்திற்கு வரும் பாரி என்ற வாலிபப் பெண்ணுக்கு தேவன் கண்பார்வை அருள; நீரிழிவு மற்றும் சிறுநீரகப் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள ராஜிதானி காலனியைச் சேர்ந்த நீலம்க்கு தேவன் அற்புத சுகமருள; விபத்தை சந்தித்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஜிந்த் கிராமத்தைச் சேர்ந்த அனிலுக்கு தேவன் அற்புதம் செய்ய ஜெபிப்போம்.

## ரத்தியா: கார்த்திகேயன் & ஜெயந்தி

**துதிக்க:** தொடர் ஜெபத்தின் மூலம் பப்லி காச நோயிலிருந்து சுகம் பெற்று வருகிறார். மிரானா கிராம ஆலய ஆண்டு விழாவினை விசுவாசிகள் சிறப்பாக கொண்டாடினர். பிசாசின் பிடியிலிருந்து தேகா ஜெபத்தின் மூலம் விடுவிக்கப்பட்டார். சத்பாலுக்கு புது வீடு கட்டிமுடிக்க தேவன் உதவி செய்தார். பெண்கள் ஜெபக்குழு சிறப்பாக நடைபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்று நோயினால் பாதிக்கப் பட்டுள்ள வருணாவை தேவன் குணப்படுத்த; குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்து வரும் ரேகா, ஜோதி, பாப்லி, சத்பால் ஆகியோரின் குடும்பங்களை தேவன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்க; 13 வயதாகியும் தெளிவாக பேச இயலாம லிருக்கும் ரஜ்வீர்சிங் சரளமாக பேச; அஜய், சத்னம், பூஜாவுக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணை அமைய; உடல் முழுவதும் வீங்கி கஷ்டப்படும் புஷ்பா பூரண குணமடைய ஜெபிப்போம்.

## மார்ச் 7 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கில்பர்ட் வில்லியம்ஸ் S.
திரு. சாலமோன் ஞானசேகர் J.
திரு. தாங் கொ லுன் கிப்ஜென்
திரு. ஜாண் அருள்ராஜ்
திருமதி. லியான்பியக்னெமி சிங்

### தோஷம்: அஜய் பர்டே

**துதிக்க:** சத்சங் கூட்டங்கள் மூலம் இரண்டு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வாஸ் கிராமத்தில் ஞாயிறு ஆராதனை ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். பிராந்திய அளவில் நடத்தப்பட்ட வேதாகமத் தேர்வில் தோஷம் பணித்தளத்திலிருந்து ஏழு வாலிபர்கள் உற்சாகத்தோடு கலந்துகொண்டனர். பல்வாஸ் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணனை விபத்திலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு, குடும்பத்தினரை கொடுமைப்படுத்தி வரும் லக்ஷ்மியின் சகோதரன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைபெற்று இரட்சிக்கப்பட; ஜெகதீஷ், பிரதாப், பாப்லி ஆகியோரின் குடும்பத்தினர் தொடர்ந்து ஆலய ஆராதனையில் பங்குபெற; நீண்ட நாட்களுக்குபின் கர்ப்பமாயிருக்கும் நேஹாவுக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; திட்டமிட்டபடி திரைப்பட நிகழ்ச்சி, ஆத்தும ஆதாயப்பயிற்சி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## ராஜஸ்தான்

### காஜுவாலா: வி. குமார் & பெட்ரிசியா தமிழ்ச்செல்வி

**துதிக்க:** 8 கே.ஜெ.டி. மற்றும் 4 ஏ.டி.எம். காலனிகளில் நற்செய்தி பகிர்ந்திட தேவன் உதவி செய்தார். 5 பி.எஸ்.டி. காலனியில் சுவிசேஷம் அறிவிக்க சட்னாம் மாயா தேவி குடும்பம் அழைப்பு விடுத்துள்ளனர். மூளைக்கு செல்லும் இரத்த குழாயில் அடைப்பு ஏற்பட்டு கஷ்டப்பட்ட குருசரண் ஜெபத்திற்கு பின்பு பூரண சுகம் பெற்றார். குருபிரசாத் குடும்பம் தங்கள் வீட்டை ஆராதனைக்கு திறந்து தந்ததோடு கிராமத்தில் நற்செய்தி அறிவித்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 27 கே.வி.டி. காலனியில் வசிக்கும் குருதேவ்சிங் நுரையீரல் நோயிலிருந்து குணமடைய; மனநோயினால் பாதிக்கப்பட்டு வீட்டில் தங்காமல் சுற்றித்திரியும் சுக்பிரீத் விரைவில் குணமடைய; பூஜாவின் படிப்பு பெற்றோர்களால் தடைப்படாமலிருக்க; குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு நமது வாலிபர்களை தேவன் விலக்கி பாதுகாக்க; அரசாங்க தேர்வுக்கு ஆயத்தப்பட்டு வரும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு தேவன் ஞானமருள ஜெபிப்போம்.

## எதிரியின் முன் உயர்த்தும் தேவன்

*கர்நாடகா மாநிலத்தின் நிடுகுண்டி பணித்தளத்திலுள்ள நமது விசுவாசி விஜயலக்ஷ்மி அங்குள்ள அங்கன்வாடியில் பணியாற்றி வந்தார். இவர் கிறிஸ்தவர் என்பதால் கிராமத்திலுள்ள மதவாதிகள் ஒன்றுசேர்ந்து, இவர் பிள்ளைகளுக்கு சரியாக உணவு கொடுப்பதில்லை, பாடம் சொல்லி கொடுப்பதில்லை என்று பொய் புகார் அளித்து அவருடைய வேலையை பறித்துவிட்டனர். விஜயலக்ஷ்மி நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து தினமும் ஜெபித்து வந்தார். தற்போது நீதிமன்றத்தின் மூலம் தனக்கு வேலை கிடைத்ததுமின்றி, அவருடைய வேலையில் யாரும் எந்தவொரு இடையூறும் செய்யக்கூடாது என்றும் தீர்ப்பளித்துள்ளது. அக்கிராமத்தில் தேவ நாமம் மகிமைப்பட்டது. அல்லேலூயா!*

## மார்ச் 8
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஹமுவேல் லிமா, செல்வி. ராணி உராண்வ்

### தபுக்காரா:
**ராஜம்மாள் ஜான்சன்,**
**டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி**

**துதிக்க:** குடியிருக்க வீடின்றி கஷ்டப்பட்ட சுனிதா வீடு வாங்கிட தேவன் கிருபை செய்தார். ஜெபத்தின் மூலம் குடி மற்றும் புகை பழக்கத்திலிருந்து விடுதலைபெற்ற தேஜ்பாயின் குடும்பம் தற்போது ஊழியத்திற்கு ஆதரவாக செயல்பட்டு வருகின்றனர். தனது கடையில் வரும் முதல் வருமானத்தை காணிக்கையாக தேவனுக்கு தர தீர்மானித்த ஜெகிந்தர் அதை நிறைவேற்றுவதற்கு தேவன் உதவி செய்து வருகிறார். விசுவாசி போஜாசிங்க்கு உபத்திரவம் கொடுத்து வந்த கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் கிராமத்தில் நடந்த ஒரு கலவரத்திற்கு பின்பு ஊரைவிட்டு சென்றுவிட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப் பழக்கத்தினால் மனைவி, பிள்ளைகளை துன்புறுத்தி வரும் அஜித் குடியிலிருந்து விடுதலை பெற்று இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; ஹர்திக் என்ற வாலிபனுக்கு இரட்சிக்கப்பட்ட மனமகளை தேவன் தந்தருள; மத்திய அரசின் தேர்வுக்கு ஆயத்தப்படும் விஜய் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சிபெற; இப்பணித்தளத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

### நம் பெண்களுக்காக ஒரு ஜெபம்

பெண்கள் தேவனின் அற்புதமான படைப்பு. அவர்கள் கொண்டாடப்படத் தக்கவர்கள். ஆனால் நம் நாட்டில் பெண்கள் ஏராளமான சவால்களை எதிர்கொள்கின்றனர். இவற்றில் சமமற்ற ஊதியம் (ஆண்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு 100 ரூபாய்க்கு 40 ரூபாய் சம்பாதிப்பது), இன அநீதி, பாலின அடிப்படையிலான வன்முறை, போதுமான சுகாதாரப் பராமரிப்பு இல்லாமை மற்றும் வறையறுக்கப்பட்ட கல்வி (பெண்களுக்கு 65.46% VS ஆண்களுக்கு 80.88%) ஆகியவை அடங்கும். பெண்கள் கடத்தல் (ஒரு நாளைக்கு குறைந்தது 3 பெண்கள்), சமூக வலைத்தளங்களில் துன்புறுத்தல், வீட்டு வன்முறை (38%), தேர்ந்தெடுக்கப்பட்ட கருக்கலைப்பு, பெண் சிசுக்கொலை, வரதட்சணை, குழந்தை திருமணங்கள் மற்றும் வீடுகளில் மதிப்பின்மை அடங்கும். டிசம்பர் 2024 நிலவரப்படி இந்தியாவில் 707 மில்லியன் பெண்கள் இருந்தனர்.

**ஜெபிக்க**

*❖ திரளான பெண் தலைவர்கள் உருவாக வேண்டும். ❖ குடும்பங்களிலும், சமூகத்திலும் பெண்கள் மதிக்கப்பட வேண்டும். ❖ தொழில் வெற்றிக்கு ஆரோக்கியமான வேலை-வாழ்க்கை சமநிலைக்கான ஏற்பாடுகள் இருக்கவேண்டும். ❖ வீட்டிலும், சமூதாயத்திலும் பெண்கள் பாதுகாக்கப்படவும், அனைத்துத் துறைகளிலும் பெண்கள் வளர்ச்சி பெறவும் வேண்டும். ❖ நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் பணிபுரியும் 436 திருமணமான பெண் மிஷனெரிகள், 36 திருமணமாகாத மிஷனெரிகள் மற்றும் 15 தனிமையில் வாழும் மிஷனெரிகள் ஆகியோரின் பாதுகாப்பு, ஆரோக்கியம், மற்றும் தேவன் இவர்களை வல்லமையாக எடுத்து பயன்படுத்த ஜெபிப்போம்.*

மார்ச்
9
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. வசந்தி ஸ்டெல்லா இம்மானுவேல்
திருமதி. பொன்னுத்தாய் ஞானசுந்தரி ஆர்தர்
திரு. டேவிட் P., திருமதி. பிரவதிமணி வினோத் குமார்

# உத்தரப்பிரதேசம்

## சிக்கந்ரா:

### பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** நான்கு இடங்களில் விசுவாசிகளுக்கு ஆரோக்கியம் மற்றும் சுகாதார கூட்டங்கள் நடத்தப்பட்டன. எதிர்ப்புகள் மத்தியிலும் விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றனர். குளிர் காலத்தில் ஏற்படும் பல்வேறு வியாதிகளுக்கு விசுவாசிகளை தேவன் விலக்கிப் பாதுகாத்தார். விஷப்பூச்சி கடியிலிருந்து கமலேஷ்க்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாலேம்பூர், இங்வாரா, நந்து ஆகிய கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட எடுக்கும் முயற்சிகளில் தேவன் உதவி செய்ய; புர்டாய், ராஜ்பூர், நினோக்ரா ஆகிய கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் மீண்டும் துவங்கப்பட; உபத்திரவங்களினால் விசுவாசிகள் பயப்படாமல் தைரியத்துடன் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள; கம்லேஷ், ஹிமான்சோ, பாரத் ஆகியோரை குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுதலை செய்ய; நடைபெறவிக்கும் ஆத்துமா ஆதாயப் பயிற்சி, வெளிப்புற சுவிசேஷ ஊழியங்களின் மூலம் மிகுந்த பலனை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

## ஹசேரன்:

### சுரேஷ் மால்தோ & பிரேம்லதா

**துதிக்க:** மஞ்சள்காமாலை மற்றும் ஒவ்வாமையிலிருந்து சந்தியாவுக்கு தேவன் சுகமருளினார். மாடியிலிருந்து தவறி விழுந்த விசுவாசி ஆயுஷின் பேரன் ராகேஷ்-ஐ தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். ராகிஸ்நாத்தின் தொண்டையில் மீன்முள் சிக்கி காயம் ஏற்பட்டபோது ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். அழுக்கான குட்டையில் சிக்கிய அனுராகை ஏற்ற வேளையில் மக்கள் பார்த்து காப்பற்றியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜோகி இன மக்களை ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளவிடாமல் தடைசெய்யும் சர்தார் ராம்கிஷான் மனந்திரும்ப; இரவில் தூங்க முடியாமல் கால் வலியினால் கஷ்டப்படும் சர்வேஷ்க்கு தேவன் பரிபூரண சுகமருள; விசுவாசி ராம்பேட்டி யாதவின் மகள் ஆர்த்திக்கு கிறிஸ்தவ வாழ்க்கை துணையை தேவன் தந்தருள; விசுவாசி ராம்குமாரை விட்டு பிரிந்து சென்றுள்ள அவரது மனைவி மனமாற்றம் பெற்று கணவருடன் சேர்ந்து வாழ; ராம்கிஷோர் மற்றும் சத்தேந்தர் ஆகியோருக்கு அரசு மூலம் வீடு கட்ட மானியம் கிடைத்தும் வீடு கட்டவிடாமல் தடைசெய்யும் வனத்துறை அதிகாரிகளின் மனதில் தேவன் இடைபட; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

## மார்ச் 10 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. செல்வகுமார் R. @ ஜோசப் வில்சன்
திருமதி. புரோமிளா சோரேன்
திருமதி. ஷர்மிளா சதீஷ்

### பஸ்தி: ஸ்ரீனிவாசன் & ஷீபா ஜி

**துதிக்க:** வாலிபர்களுக்காக நடத்தப்பட்ட இரண்டு நாட்கள் பயிற்சியில் 35 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். கடும் குளிர் காலங்களில் விசுவாசிகளையும், ஊழியர்களையும் தேவன் பாதுகாத்தார். பெங்களூரில் நடைபெற்ற பெண்கள் கூடுகையில் உத்தரப்பிரதேச ஊழியங்களை குறித்து பகிர்ந்துகொண்டபோது அநேகர் பாரத்தோடு ஜெபிக்க தங்களை அர்ப்பணித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ள 18 வயது சுதா மற்றும் கருணாமாயை தேவன் குணப்படுத்த; விசுவாசி தீபாவின் தந்தை பப்லு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; கண் பிரச்சனையிலிருந்து அமராவதியை தேவன் குணப்படுத்த; முன்னாள் ஊழியர் ஹரிஹர் யாதவ் மற்றும் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தேவன் அவர்களை விடுவிக்க; ஆலயம் வரும் வாலிபர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பை தேவன் தந்திட ஜெபிப்போம்.

### பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர், அஜித் பாண்டியன்

**துதிக்க:** ரோஹித், மீரா, அனில் ஆகியோரை பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுவித்தார். ஊமையாயிருந்த ஏழு வயது தன்ராஜ் ஜெபத்திற்கு பிறகு பேச ஆரம்பித்துள்ளான். அதிக இரத்தப்போக்கினால் அவதியுற்று வந்த சோனுவின் மனைவி ஆஷாவுக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சும்ருதி, மம்தா, பிரதீப் ஆகியோர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கை செய்ய; மெகனா ஆலயம் சம்பந்தப்பட்ட நீதிமன்ற வழக்கில் விசுவாசிகளுக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்க தேவன் உதவி செய்ய; சுதேச ஊழியர் ஷியாம் சுந்தர் மீதுள்ள பொய் வழக்கு விரைவில் தள்ளுபடி செய்யப்பட; பிசாசின் பிடியிலிருந்து ரவீந்தருக்கு தேவன் விடுதலை அருள; நடக்க முடியாமல் கஷ்டப்படும் விஜயகரனை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

### காட்டாம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு காவல் துறையினரின் உதவியோடு காட்டாம்பூர் ஆலயம் திறக்கப்பட்டு ஆராதனை நடத்திட தேவன் கிருபை செய்தார். எல்லா சபைகளிலும் காவல் துறையின் அனுமதியோடு ஆராதனை நடைபெற்று வருகிறது. கிறிஸ்துவை வெறுத்துவந்த சபை மூப்பர் சுனிதாவின் மருமகன் தற்போது கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு ஆராதனையில் கலந்துகொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காட்டாம்பூர் ஆலயத்தில் தொடர்ந்து ஆராதனை தடையின்றி நடைபெற; காவல்துறை மற்றும் அரசாங்கத்தின் கெடுபிடியினால் ஆராதனைக்கு வர தயங்கும் விசுவாசிகளுக்கு தேவன் தைரியம் அருளவும், விசுவாசிகளின் குடும்பங்கள் பொருளாதார வாழ்வில் பெலப்படவும், ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

## மார்ச் 11 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆசீர் செல்வராஜ் C.
திரு. பிரவீன் தாஸ்
திரு. சத்திகாந்தா பரிச்சா

### ஜாலவ்ன்: கவித் ராகேஷ் ரத்திலால் & ஈகார் ரேஷ்மா மாருதி

**துதிக்க:** திக்கார் கிராமத்தில் புதிதாக ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பஜுனா கிராமத்தில் புதிதாக வீட்டு ஜெபக்கூடுகை நடைபெற்றது. ஒரு குடும்பம் கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். ராம்பூரா துணை பணித்தளத்தில் ஊழியம் விருத்தியடைய கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திக்கரார் கிராமத்தைச் சேர்ந்த ராம்கந்த் பக்கவாதத்திலிருந்து குணமடைய; 15 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக தவிக்கும் தினேஷ் குடும்பம் மற்றும் ஹேமலதா குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; புற்றுநோய்க்கு சிகிச்சை பெறும் காந்திபெனை பக்கவிளைவுகளிலிருந்து தேவன் சுகப்படுத்த; குனியபுரா, ஜஹாம்பூர், துஷிபூர் ஆகிய பகுதிகளில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்தவாசலை தந்தருள; தொடர் காய்ச்சலினால் அவதிப்படும் சான்வியை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

# மத்தியப் பிரதேசம்

## கர்கோன்:

### பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா

**துதிக்க:** எதிர்ப்புகளின் மத்தியிலும் ஜலால்பானி, சிப்டான், சைக்காடா, ராம்புரா, நைகோட், சாரதாபூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலை தந்தருளினார். ஆத்தும ஆதாயம் செய்வதின் முக்கியத்துவம் மற்றும் வழிமுறைகளைப் பற்றி நடத்திய பயிற்சியில் அநேகர் கலந்து கொண்டு பயன்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிலோடியா கிராமத்தைச் சேர்ந்த அனிதாவை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; சிறு வயதிலிருந்தே சரிவர பேச இயலாமலிருக்கும் அம்ரிதா என்ற சிறுமிக்கு சரளமாக பேசும் திறனை தேவன் அருள; கை, கால்களில் அடிக்கடி கட்டிகள் வந்து புண்ணாகியிருக்கும் பார்கா நாயக் என்பவரை தேவன் குணப்படுத்த; கராடியா கிராமத்தில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; தடைப்பட்டிருக்கும் நக்குவா கிராம ஜெபக் கூட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

### சிரியா: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** பிஜுப்பூர், சார்டாட் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். அடமானம் வைத்த கரியாபுத்தாவின் நிலத்தை திருப்பித்தர மறுத்த நபருக்காக உபவாசித்து ஜெபித்தபோது அவரது நிலம் அவருக்கு திரும்ப கிடைக்க தேவன் உதவி செய்தார். விவசாயம் செய்ய போதுமான நீராதாரம் இல்லாத சூழ்நிலையில் சால்பால் குடும்பம் உபவாசித்து ஜெபித்து கிணறு தோண்டியபோது 15 அடியில் போதுமான தண்ணீர் கிடைக்க தேவன் உதவி செய்தார். வீடின்றி கஷ்டப்பட்டு வந்த ரேகாவின் ஜெபத்தைக் கேட்ட தேவன் அரசாங்கத்தின் மூலம் வீடு கிடைக்கும்படி கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள தௌலத்பூரில் தேவன் மகத்தான கிரியை நடப்பிக்க; சுவிசேஷம் அறிவிக்க தடைவிதித்துள்ள ரவ்ராம் கிராமத்தினர் மனந்திரும்பி தேவனை ஏற்றுக்கொள்ள; பிசாசின் பிடியிலிருந்து சாதனாவுக்கு தேவன் விடுதலை அருள; கை அக்குலில் அடிக்கடி கட்டி வந்து வேலை செய்ய முடியாமல் சிரமப்படும் சோனிபாய்க்கு தேவன் பரிபூரண சுகம்தர ஜெபிப்போம்.

மார்ச்
12
புதன்
உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷைனி கின்ஸ்லி
திரு. லெட்கோஜின் மட்டே

## அஸோம்

### கோஹ்பூர்: நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா

**துதிக்க:** இரண்டு இடங்களில் விசுவாசிகளின் கூடுகையும், புதிய கிராமம் ஒன்றில் இரவு கூட்டமும் நடத்தப்பட்டது. அனிதாவுக்கு சுகப்பிரசவத்தின் மூலம் தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். ஏழு கிராமங்களில் பின் தொடர் பணியின் மூலம் புதிய தொடர்பாளர்கள் உற்சாகப்படுத்தப்பட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மூன்று கிராமங்களில் விரைவில் ஆலயம் கட்டப்பட; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் நோபீன் குட்டும் விசுவாசத்தில் வளர; மிஷனெரியின் மனைவி நிருபோமாவுக்கு தைராய்டு பிரச்சனையில் அறுவை சிகிச்சையின்றி தேவன் சுகமருள; தன்னார்வ ஊழியர்களான ரோமன் பெகு, மகேஷ் பத்ரி, மோனுராம் பெகு, லீலாகாந்தா பச்சுங் ஆகியோரை தேவ இராஜ்யம் விரிவாக்கும் பணியில் தேவன் வல்லமையாக பயன்படுத்த ஜெபிப்போம்.

## பீஹார்

### ராணிகஞ்ச்: ஆனந்தன் எம். & நிஷா

**துதிக்க:** ரெய்கா, சிம்மா, சிக்கி ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்ய தேவன் கிருபை செய்தார். ரெய்கா கிராமத்தில் சத்தியதேவ் ரிஷியை வியாதியிலிருந்து குணப்படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய கிராமங்களில் கிடைத்துள்ள தொடர்பாளர்கள் விசுவாசத்தில் வளரவும், ஆராதனைக் குழுக்கள் உருவாக்கப்பட எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்கவும்; சிம்மா கிராமத்தைச் சேர்ந்த முன்னிதேவி, மண்தார் ரஷி ஆகியோர் தங்கள் வியாதியிலிருந்து சுகம் பெறவும், அக்கிராமத்தில் ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்படவும் ஜெபிப்போம்.

### கிழக்கு கங்கை பிராந்தியம்: பாபு புஷ்பராஜ் & ரேச்சல் ஜாய்ஸ்

**துதிக்க:** பின்தொடர் ஊழியம் ரைக்கா, சிம்மா, சிக்னி, பக்கேஷி ஆகிய கிராமங்களில் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். கேரா கிராமத்தில் புதிய ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பத்தேபூர், ராம்துங்கா, பங்கால்பாரி மற்றும் மஹாத்பூர் பகுதிகளில் நாடகம் மூலம் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். சகர்ஷா பகுதியில் நற்செய்தி மூலம் அநேகரை சந்திக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள முன்னி தேவியின் கண் பிரச்சனை நீங்க; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் ராஜ்பான்சி இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; திரிவேணி பகுதியில் ஊழியம் செய்ய முன்வந்துள்ள நிராஜ் தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட; மிர்ஸ்வா, ரத்தன்சா, தாம்கலா, பில்லுவா ஆகிய பகுதிகளில் பின்தொடர்பணி செய்ய எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; சகர்ஷா பகுதியில் மருத்துவ குழு மூலம் ஊழியம் ஆரம்பிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## மார்ச் 13 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஹூட்டோய் அச்சுமி K.

திரு. ஏசு பிரகாஷ் J.

# ஜார்க்கண்ட்

## ஜமா:

### முன்னா மொகந்தியர் & சுமித்தா தாஸ்

**துதிக்க:** துதலி மற்றும் டோம்னடி கிராமங்களில் புதிதாக ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். இரண்டு இடங்களில் சபை மக்களுக்கு ஆத்தும ஆதாயப் பயிற்சி கொடுக்கப்பட்டது. நான்கு இடங்களில் பின்தொடர் பணி தடையின்றி செய்ய நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிராம மக்களை தேவனுக்கென்று ஆதாயப்படுத்த சபை மூப்பர்கள் மற்றும் விசுவாசிகள் எடுத்த தீர்மானத்தில் உறுதியாக இருக்க; வேலை நிமித்தம் புலம்பெயர்ந்து செல்லும் விசுவாசிகள் வேலை செய்யும் இடங்களில் தேவனுக்கு சாட்சியாக வாழ; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ராம்தாஸ் சோரன் விரைவில் குணமடைய; வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள அனிதா முர்மு, சோனோமி ஹெம்ரோம், கணேஷ் மராண்டி விரைவில் சுகம்பெற; மனநலம் பாதிக்கப்பட்டுள்ள பட்டல் ஹெம்ரோமுக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

## லால்மட்டியா:

### அமரேந்திரன் & சுவேதா

**துதிக்க:** புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். பிசாசின் பிடியிலிருந்து ஜெசிகாவுக்கு தேவன் விடுதலை அருளினார். மருத்துவமனையில் நோயாளிகளுக்கு நற்செய்தி அறிவிக்கும் வாய்ப்பை தேவன் அருளினார். நீண்ட காலமாக சுகவீனத்திலிருந்த பால்கி, தேவ்நாராயண் மற்றும் நிர்மலா ஆகியோர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாகிக்கொண்டிருந்த வேளையில் பால்கோமி கிராமத்தின் தலபாபு பெஸ்டி, கடாரா கிராமத்தின் பிரியா ஹன்ஸ்தக் மற்றும் தல்காலி கிராமத்தின் தாலாபாபு ஆகியோர் மரணமடைந்துவிட்டனர். கிராமத்தினர் இவர்கள் குடும்பத்தினரை விசுவாசத்தை விட்டுவிடும்படி வற்புறுத்துகின்றனர். இவர்கள் விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க; புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள சலோமி விரைவில் குணமடைய; நுரையீரலில் தண்ணீர் தேங்கி கஷ்டப்படும் தலாபாட்டி முர்முவுக்கு தேவன் சுகமருள ஜெபிப்போம்.

## மார்ச் 14 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. எலிசபெத் டேவிட்
திரு. வியாசு பாபு A., திருமதி. உங் தியான்சிங் தாங்
திருமதி. பிராரி ரீட்டாபேன்

### அமலகாச்சி:
### கஜன் சம்பிரமாரி & ரோஷிலா

**துதிக்க:** தலாய்பூரில் பெரிய அளவில் நடத்தப்பட்ட இரவு கூட்டத்தில் அநேகர் கலந்துகொண்டு தேவ வசனத்தை வாஞ்சையோடு கேட்டனர். நமது ஊழியர்கள் வழிமாறி தவறான பாதையில் காக்பஹார்பூர் என்ற புதிய கிராமத்திற்கு சென்றபோதிலும் அங்கு சுவிசேஷம் அறிவிக்கவும், புதிய தொடர்பாளர்கள் கிடைக்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாகர்பூர், தலாய்பூர் மற்றும் தரணி கிராமங்களில் விதைக்கப் பட்டுள்ள சுவிசேஷ விதைகள் விரைவில் நல்ல பலனைத் தர; சான்பஹாரி புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராதனைக் குழு தடையின்றி தொடர்ந்து நடைபெற; மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதை வீடுகள்தோறும் சென்று தடைசெய்யும் மதவாதிகள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; சபை மூப்பர்களும், சுதேச ஊழியர்களும் விசுவாசிகளை ஆவிக்குரிய வாழ்வில் அனல்மூட்டி எழுப்பவும், இப்பணித்தள ஊழியம் விருத்தியடையவும் ஜெபிப்போம்.

### ஹன்ஸ்டிகா:
### செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** எட்டு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். லுசியா சபை மூப்பர் ஹோப்பனா டுடு குளிர் தாக்கி மரிக்கும் தருவாயில் தேவனின் அற்புத சுகம் பெற்று மீண்டும் ஊழியம் செய்ய ஆரம்பித்துள்ளார். சபை மூப்பர் சப்பாராம் ஊழியத் திற்காக தனது ஆட்டோவை கொடுத்து உதவினார். ஜால்வார் கிராம சபை மூப்பரின் குடும்பத்தை அழிக்கும் படி திட்டமிட்ட உறவினர்களின் முயற்சிகளை தேவன் முறியடித்து சபை மூப்பரின் குடும்பத்தை தேவன் பாதுகாத்தார். வலிப்பு வியாதியினால் அவதிப்பட்ட மனோஜ் சோரன் ஜெபத்தினால் சுகம் பெற்றபடியால் அநேகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அறிக்கை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மூன்று கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்களை துவங்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; திரளான மக்கள் சுவிசேஷத்தை வாஞ்சையுடன் கேட்டு இரட்சிக்கப்பட; திட்டமிட்டிருக்கும் அனைத்து கூடுகைகளும் தடையின்றி நடைபெற; இப்பணித்தளத்திலுள்ள அனைத்து ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.

மார்ச்
15
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அருணா கிங்ஸ்லி, திரு. ஸ்டாலின் ஜீவா N.
திருமதி. பரஞ்ஜோதி லூசினா சுப்ரமணியன்
திருமதி. ஏஞ்சலின் வசந்தி இளங்கோவன்
திரு. ஹிஜாம் கென்னடி சிங்
திரு. ராஜன் S., செல்வி. ஷீலா ஹன்ஸ்தக்

## கைராபானி சிறுவர் விடுதி:

### மனோஜ்குமார் பானி & சந்தானி பானி

**துதிக்க:** வாலிபர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் விடுதி மாணவர்கள் வாஞ்சையோடு கலந்துகொண்டு பயன்பெற்றனர். ஒருநாள் சிறுவர் முகாம் ஆசீர்வாதமாக நடைபெற்றது. 20 நாட்களாக டைபாயிடு காய்ச்சலினால் கஷ்டப்பட்டு வந்த ரூபின் முர்முவை ஜெபத்தின் மூலம் தேவன் குணமாக்கினார். அஜய் சோரன், கிஷான் சோரன் ஆகியோருக்கு காதில் ஏற்பட்ட தொற்றிலிருந்து சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கல்லூரியின் இறுதித் தேர்வு எழுதும் பர்னபாஸ் மற்றும் ஜாரேஸுக்கு தேவன் விசேஷித்த ஞானம் அருள; விடுதியில் அடிக்கடி சந்திக்கப்படும் தண்ணீர் பிரச்சனை, ஜெனரேட்டர் பழுதாகும் நிலை விரைவில் சரிசெய்யப்பட; கல்லூரி விடுதியில் தங்கி படிக்கும் மாணவர்கள் மற்றவர்களுக்கு சாட்சியாய் வாழ; கால் வீக்கத்திலிருந்து வில்லியம் டுடுவையும், வலிப்பு நோயிலிருந்து நத்தானியேல் சோரன் மற்றும் ஹப்பி பெஸ்ராவையும், விரைவீக்கப் பிரச்சனையிலிருந்து சைலேஷ் மற்றும் ஜேம்ஸ் மராண்டியையும், சிரங்கிலிருந்து சைமன் பாஸ்கியையும் தேவன் குணப்படுத்த; விடுதி ஊழியர்களுக்கு தேவன் நல்ல சுகத்தையும், ஞானத்தையும் அருள; அர்ப்பணமுள்ள வார்டன் கிடைக்க ஜெபிப்போம்.

## பகையா:

### ஜெபக்குமார் பெரியசாமி & பொன்லதா

**துதிக்க:** ஜெபத்தின் மூலம் பிசாசின் பிடியிலிருந்து சர்க்குன் என்பவருக்கு தேவன் பரிபூரண விடுதலை அருளினார். கடந்த குளிர் காலங்களில் தேவன் விசுவாசிகளையும், ஊழியர்களையும் பாதுகாத்தார். இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்த மிஷனெரி ஜெபக் குமாரை அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தலையில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இரண்டு வயது எஸ்தர் மின்ச் என்ற சிறுமிக்கு தேவன் அற்புதம் செய்ய, பண தேவைகள் சந்திக்கப்பட; தௌலத்பூர் கிராமத்தில் சுவிசேஷத் திற்கு வாஞ்சைக்காட்டும் பஜ்ரங்கி எக்கா குடும்பத்தினர் ஆண்டவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; கான்பூர், ஶ்ரீபூர், பத்தர்கனி, நவாடி, குமார்டோ ஆகிய கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட; மசூரியா கிராமத்தில் ஆலயம் கட்ட எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; விசுவாச பெற்றோர்களும், வாலிபர்களும் பரிசுத்த விவாகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பரிசுத்த வாழ்க்கைக்கு தங்களை ஒப்புக்கொடுக்க; சுவிசேஷத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முனிலால், டோமா, ஜெகதீஷ், சங்கர், சோட்டேலால், மது ஒராவன் ஆகியோர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## மார்ச் 16 ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எக்டோ சோஃபி
திருமதி. அனிமோல் ஜாண் குமார்
திருமதி. ஆக்னஸ் எபிநேசர் எட்வர்ட்
திருமதி. ஷிஃபாலி ஹன்ஸ்தா

### லிட்டிபாடா:

**எபினேசர் சாமுவேல் & மேபல் ஃபிளாரன்ஸ்**

**துதிக்க:** ரோஹன்கட் சபை மூப்பர் சக்கல்பாயின் மனைவி குழந்தை பேற்றின் போது ஏற்பட்ட ஆபத்தான சூழ்நிலையிலிருந்து ஜெபத்தினால் அற்புதமாக காப்பாற்றப்பட்டார். மன நோயினால் பாதிக்கப்பட்டு, குடும்பத்தில் அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வந்த முன்சி மராண்டிக்காக ஏறெடுத்த ஜெபத்தின் மூலம் அவர் சுகம்பெற்று தன் குடும்பத்துடன் சமாதானமாய் வாழ்ந்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கவிருக்கும் விசுவாசிகளின் முகாம், வேதாகம வகுப்புகள், சபை மூப்பர்கள் பயிற்சி ஆகியவை சிறப்பாக நடைபெற; பிள்ளை பேற்றை எதிர்நோக்கியிருக்கும் கடேடேலா சபை மூப்பரின் மனைவிக்கு தேவன் சுகப்பிரசவம் அருளிச்செய்ய; புதிய கிராமங்களான ஜாகேஷ்வர், சாம்பூர், சஹோல், தகராங்கி ஆகிய இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு சபைகள் உருவாக்கப்பட; நடக்கவிருக்கிற விசுவாசிகள் மேளா எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

### தீன்பஹாா்:

**நெகேமியா & அனாமிகா பெகு**

**துதிக்க:** புதிதாக ஆண்கள் ஐக்கியக் குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது; வேலை நிமித்தம் ஹைதராபாத் சென்றிருந்த சோட்டாலால் மிஞ்ச் சுகவீனமானபோது ஜெபத்தின் மூலம் தேவன் அவரை சுகமாக்கினார். வாலிபர் ஐக்கிய குழு மூலம் வாலிபர்கள் அண்டை மாநிலமான மேற்கு வங்கத்திற்குச் சென்று சுவிசேஷம் அறிவித்திட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்

**ஜெபிக்க:** புதிதாக கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் விசுவாசத்தில் உறுதியாய் கட்டப்பட; தகப்பனாரின் மறைவுக்குப்பின் ஆலயம் வர ஆர்வமின்றி இருக்கும் ராம்தேவ் முண்டாவின் இருதயத்தில் தேவன் கிரியை செய்ய; பிரசவத்தில் இரு குழந்தைகளையும் இழக்கக் கொடுத்துள்ள டினுவின் துயரத்தை தேவன் நீக்கி ஆறுதல்படுத்த; மித்லேஷ் டோப்பு, குடுவா முண்டா, ஜூலி குமாரி, நிரஞ்சன் டோபு, மண்டல் முண்டா ஆகியோர் விசுவாசத்தில் வளர்ந்து தேவனுக்கு சாட்சியாய் ஜீவிக்க; அரசாங்கத்துக்கு தங்கள் நிலத்தை கொடுத்துள்ள விசுவாசிகளுக்கு தக்க பலன் கிடைக்க ஜெபிப்போம்.

மார்ச்
**17**
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. செல்வராஜ் A.
திருமதி. சவிதா தேவி ஆஷிஷ் குமார்

# மேற்கு வங்காளம்

## சம்சி:

### தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** இரவு கூடுகைகள், திரைப்பட ஊழியம், வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் யாவும் தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். குஷாஹா கிராமத்தில் ஞாயிறு ஆராதனை துவங்கிட கர்த்தர் கிருபை செய்தார். தக்ஷின் சாகர் ஆலயம் கட்டி முடிக்க தேவன் உதவி செய்தார். தாலு ஹன்ஸ்தாவின் மனைவிக்கு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர் குடும்பம் மற்றும் ஜெபக்குழு தலைவர்கள் சுவிசேஷ ஊழியத்தில் வாஞ்சையோடு ஈடுபட; ஜித்தல்பூர், பஜித்பூர் ஆகிய கிராமத்தில் தற்காலிக ஆலயம் விரைவில் கட்டப்பட; குஷாஹா கிராமத்தைச் சேர்ந்த நாராயண் முர்மு, சோட்டே முர்மு, துர்கா முர்மு, பேட்டா முர்மு, முகேஷ் முர்மு, அனில் கிஸ்கு, பாபுஜி கிஸ்கு, மணிக் முர்மு மற்றும் ஓடாம்புக்ரி கிராமத்தைச் சேர்ந்த மகலு ஹன்ஸ்தா இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; கிறிஸ்தவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தாக்கூர் கிஸ்கு, மித்துன் ஹன்ஸ்தா, லாலு சோரன், சுனில் கிஸ்கு, மஞ்சு கிஸ்கு ஆகியோரின் உள்ளத்தில் தேவன் கிரியை செய்ய ஜெபிப்போம்.

## பாக்குவாஹாட்:

### ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** ஜெபத்தின் மூலம் கோமலி ஹஸ்தா பக்கவாதத்திலிருந்து சுகம் பெற்று வருகிறார். பிரிஸ்டி முர்மு மற்றும் அஸ்தா முனி மீண்டும் கல்வியைத் தொடர தேவன் கிருபை செய்தார். கருச்சிதைவினால் மரணத் தருவாயிலிருந்த கல்பனா முர்மு ஜெபத்தினால் பூரண சுகம் பெற்றார். வாலிபர்களுக்கான பயிற்சியில் கலந்து கொண்ட விஷ்வநாத் டுடு ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்துள்ளார். காணாமல்போன பிசுகா ஹஸ்தாவின் மகன் விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் பத்திரமாக வீடு வந்து சேர்ந்தமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஜானே முர்மு, லேட்டர் முர்மு, சிபு டுடு, மஹாஜோன் ஹஸ்தா ஆகியோர் மனந்திரும்ப; புலம்பெயர்ந்து செல்லும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வை தேவன் பாதுகாக்க; சுதேச ஊழியர்களான சீமோன் கிஸ்கு மற்றும் ஜெட்டா ஹெம்ரோம் குடும்பத்திற்கு தேவன் சுகபெலனும், பாதுகாப்பும் அருள; ராம்நாத் ஹஸ்தா குடும்பத்தினர் கடன் பிரச்சனையிலிருந்து விடுபட; கோமலி ஹஸ்தாவுக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

## மார்ச் 18
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. இந்தராம்மா டேனியல் விஜயராஜ்

### தபான்:
### ஹரமோகன் பிரபுதாஸ் நாயக் & சூசம்மா

**துதிக்க:** அன்டோல் கிராமத்தில் அமித்சோரன் என்ற 11 வயது சிறுவன் இரவில் கடும் காய்ச்சலினாலும், இருமலினாலும் அவதியுற்று மயக்க நிலைக்கு சென்றுவிட்டான். இரவு முழுவதும் விசுவாசிகள் ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் காலையில் அவன் பரிபூரண சுகத்துடன் எழும்ப உதவி செய்தார். மூக்கிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்த ஜெய்தேவ் முர்முவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை அருளினார். புலம் பெயர்ந்து சென்ற இடத்தில் யாரும் உதவியற்ற நிலையில் 10 நாட்களாக வாந்தி பேதியில் அவதியுற்ற ஜோய்தேவ் முர்முவுக்கு தொடர் ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். சல்பாரி கிராமத்தின் ஒரே விசுவாசியான டெபுசோரன் மரித்தபோது கிராமத்தினர் யாரும் அடக்கம் செய்ய முன்வராத நிலையில் ஜெபத்தைக் கேட்ட தேவன் கிராமத் தலைவரின் இருதயத்தில் இடைப்பட்டதால் கிராமத்தினரின் உதவியுடன் அடக்கம் செய்யப்பட்டார். நம் விசுவாசிகள் அநேகருக்கு பிரதம மந்திரியின் இலவச வீடு வழங்கும் திட்டத்தின் மூலம் வீடு கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பூஜா டுடு மனநோயிலிருந்தும், துர்கா முர்மு காச நோயிலிருந்தும், லில்முனி சரீர பெலவீனத்திலிருந்தும், புல்மோனி மார்டி மூல வியாதியிலிருந்தும், பசந்தி ஹெம்ரோம் சுவாச கோளாறிலிருந்தும், சோனோடி டுடு உயர் இரத்த அழுத்தத்திலிருந்தும் சுகம்பெற; சபை மூப்பர்கள் வேத அறிவில் வளர; நம் விசுவாசிகள் தங்கள் தாய்மொழி வேதாகமத்தை வாஞ்சையோடு வாசித்து வசனத்தின்படி வாழ; கிறிஸ்துவுக்காக தங்களை அர்ப்பணித்த வாலிபர்கள் சாட்சியான வாழ்க்கை வாழ ஜெபிப்போம்.

### இட்டாஹார்: அஸ்தபான் ஆதித்திய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** பிரதம மந்திரியின் இலவச வீடு வழங்கும் திட்டத்தின் மூலம் 10 விசுவாசிகள் பயன்பெற்றனர். சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி பயனுள்ளதாக அமைந்தது. பசாஹர் கிராமத்தைச் சேர்ந்த தலாமாய் பாஸ்கி இரத்த வாந்தியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் உற்சாகமாய் வளர; காச நோயிலிருந்து புரண் டுடுவை தேவன் குணப்படுத்த; அநேக நாட்களாக முதுகு வலியினால் அவதியுறும் லுத்தர் ஹெம்ரோம் மற்றும் விம் சோரனுக்கு தேவன் பூரண சுகமருள; கர்ப்பமாயிருக்கும் சோனாலி முர்மு மற்றும் பிஸ்வா முனிக்கு தேவன் சுகப்பிரசவத்தைக் கட்டளையிட; ரூபன் முர்மு, நிமாய் முர்மு, அர்ஜுன் முர்மு ஆகியோரின் குடும்பத்தினர் ஜீவனுள்ள தேவனை விசுவாசிக்க; சிறுநீரகக் கல் பிரச்சனையினால் கஷ்டப்படும் பருவால் முர்மு மற்றும் சஜோனிக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

மார்ச்
19
புதன்
உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ரேணுமா சாடங்கி தீப்திலால் மாலி
திருமதி. டெல்ஃபின் கிங்ஸ்லி லிவிங்ஸ்டன்

**கரன்டிகி: கய்தியென்ஜின் வய்ஃபெய் &மெலடி டிம்சோன்டிங்**

**துதிக்க:** கிஷான்கஞ்ச் மாவட்டத்தில் ஊழியத்தை விரிவுப்படுத்தவும், பஞ்சிபாரா பகுதியில் நற்செய்தி அறிவிக்கவும் தேவன் கிருபை செய்தார். குன்டர்காவ் கிராமத்தில் விசுவாசிகள் தங்கள் சொந்த முயற்சியில் தற்காலிக ஆலயம் கட்ட தேவன் உதவி செய்தார். அநேக நாட்களாக நடக்க முடியாமலிருந்த குன்டர்காவ் கிராமத்தின் சிருஷ்டி கிஸ்கு ஜெபத்திற்கு பின் நடக்கும்படி கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்தங்கியுள்ள ஹோப்பன் ஹஸ்தா மற்றும் சிபு பாஸ்கி குடும்பத்தினர் தேவனிடம் திரும்ப; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விஜய் மகத்தோ, புலாய் முர்மு, லுத்துரு முர்மு, பப்லு முர்மு, மஜ்ஹாக் ஆகியோர் ஜீவனுள்ள தேவனை கண்டுகொள்ள; உள்குட்டு மற்றும் சாட்னிகுட்டு கிராமங்களில் ஆராதனை தடையின்றி தொடர்ந்து நடைபெற; விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் சாட்சியான வாழ்க்கை வாழ; சுதேச ஊழியர் ஜெத்தா ஹெம்ரோம் குடும்பம் உத்தமமாய் தேவனுக்கு ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

**பாலூர்ஹட்: ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின், ரஞ்சன்**

**துதிக்க:** மூப்பர்களுக்கான முகாம், பின்தொடர் பணி, தடையின்றி சிறப்பாக நடைபெற்றது. அனைத்து சபைகளிலும் வேதாகம வகுப்புகள் மற்றும் சிறுவர் வேதாகம வகுப்புகள் தொடர்ந்து நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள டெட்கெட்டாலா, சக்காரியா, அம்ரீத்பூர், பெல்லா ஆகிய கிராமங்களில் வாழும் மக்களின் இருதயங்களில் தேவன் கிரியை செய்ய; சபை மூப்பர்களான சுசில் ஹன்ஸ்தக், அமின் ஹன்ஸ்தக், ஜோஹன் முர்மு, சேம் கிஸ்கு ஆகியோர் தேவானல் வழிநடத்தப்படவும், சபை விசுவாசிகளுக்கு மாதிரியாய் வாழவும், வரும் மாதம் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் யாவும் தடையின்றி நடைபெறவும் ஜெபிப்போம்.

## ஒடிசா

**ஜகன்நாத்பூர்: பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ, சுரேஷ் மால்தோ**

**துதிக்க:** வாலிபர்களுக்கான ஆவிக்குரிய ஆலோசனைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. பரம்ஜாடா கிராமத்தில் கட்டப்பட்டு வரும் பயிற்சி மையத்தின் கட்டுமானப்பணிகள் தடையின்றி நடைபெற்று வருகின்றன. பிர்ஹோம் மக்கள் மத்தியில் புதிய ஜெபக்குழு ஒன்று துவங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ள மராகிசாய், குமிர்டா, குமார்டுங்கி ஆகிய கிராமங்களில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சுக்கிலால் லுஹரி, பகவான் லுஹரி, மேத்திராம் லுஹரி ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; பக்கவாதத்தினால் துன்பப்படுகிற குருபாரி விரைவில் சுகம்பெற; நடக்கவிருக்கும் ஆத்தும ஆதாய பயிற்சி, சுதேச ஊழியர்கள் குடும்பக் கூடுகை ஆகியவை தடையின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

மார்ச் 20 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் பெருமாள், திரு. ஜார்ஜ் C.R.
திருமதி. புஸ்பிதா ராணி பெஹரா
திருமதி. ஞான செல்வராணி ஜீவா
திரு. பிமல் சந்திர முர்மு, திரு. சாமுவேல் பெபர்த்தா

## குஜராத்

### செலம்பா:

#### யுவனேஷ் & ஜான்சி ராணி

**துதிக்க:** அநேக வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்து வந்த தகம்சா பெனுக்கு அழகான ஆண்குழந்தையை தேவன் தந்தருளினார். இரண்டு இடங்களில் பெண்கள் கூடுகை சிறப்பாக நடைபெற்றது. பக்கவாதத்தினால் நடக்கயியலாமலிருந்த நிக்கிதா தொடர்ந்து ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டு ஜெபித்தபோது தேவன் அவரை நடக்கும்படி கிருபை செய்துள்ளார். நிலப்பிரச்சனையினால் நிம்மதியிழந்து காணப்பட்ட சத்தீஷ்க்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் மூலம் அவரது நிலப்பிரச்சனையை சுமுகமாக முடியச் செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருப்போர் விசுவாசத்தில் இன்னும் அதிகமாய் வளரவும், எவ்வித தடையுமின்றி கிறிஸ்துவை அறிக்கையிடவும்; சிறுநீரக கல் பிரச்சனையிலிருந்து ஈஸ்வர்பாய் குணமடைய; சுவார்தாவுக்கு இரட்சிக்கப்பட்ட வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

### சூரத்:

#### மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** உமியநகர் மற்றும் கணேஷ் நகரில் புதிதாக ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட கர்த்தர் உதவி செய்தார். பாப்லுபாய் & வசந்தி பென் தம்பதியினர் வருமானமின்றி தவித்த வேலையில் ஒரு ஆட்டோ ரிக்ஷா வாங்கிட தேவன் கிருபை செய்தார். நுரையீரல் வீங்கி ஆபத்தான நிலையிலிருந்த ராதா பெனுக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கண்களில் பார்வை மங்கி கஷ்டப்படும் நிஷா பெனுக்கு தேவன் தெளிவான பார்வையை அருள; காவலர் பணிக்கு தேர்வு எழுதியுள்ள சாஹில், ஆரிப் மற்றும் ஆரவ் அதில் தேர்ச்சியடைய; விசுவாசத்தில் பின்வாங்கியுள்ள சிவானி குடும்பம் மீண்டும் தேவனோடுள்ள ஐக்கியத்தை புதிப்பித்துக்கொள்ள; வேலை நிமித்தம் வெளி மாநிலத்திற்குச் சென்றுள்ள உமேஷ்வரியின் பாதுகாப்பிற்காக; ஆவிக்குரிய கூட்டங்களுக்கு செல்வதை தடைசெய்யும் விசுவாசி ரேவாபாயின் மாமா மனந்திரும்ப ஜெபிப்போம்.

### அஹ்வா:

#### விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.

**துதிக்க:** இரத்தம் உறைதல் குறைப்பாட்டினால் அவதியுற்று வந்த கொசம்யா கிராமத்தின் கமலேஷ் பாய் ஜெபத்தினால் சுகம்பெற்றார். திருமணமாகி ஐந்து வருடங்களாக குழந்தையின்றி தவித்த சுதேந்திரன் & ஊர்மிளா தம்பதியினருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். பிறவியிலிருந்து நடக்கயியலாமலிருந்த பிரவீனா பென் விசுவாசிகளின் தொடர் ஜெபத்திற்குப் பலனாக தற்போது கோலூண்றி நடக்க துவங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிமோனியா காய்ச்சலினால் பெவீனப்பட்டுள்ள மிஷனெரி சகோதரருக்கு தேவன் பெலனருள; புதிதாக ஆலயத்திற்கு வரும் மோஹன் பாயின் தீராத நெஞ்சு வலியை தேவன் சுகப்படுத்த; தும்கல் கிராமத்தின் சிறுவன் ஷைலெஷ் வலிப்பு நோயிலிருந்து சுகமடைய; இருசக்கர வாகன விபத்தில் சிக்கி கால் எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ள மோஹாபாடா கிராமத்தின் விலாஸ்பாய் குணமடைய; பின்தொடர்பணி செய்யப்பட்டுள்ள கிராமங்களில் தேவன் நல்ல அறுவடையைக் கட்டளையிட ஜெபிப்போம்.

மார்ச்
21
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. செலினா ஹன்ஸ்தக் கிஸ்கு
திருமதி. புரொபிலா பொசுமத்தாரி பிரதீப்
திருமதி. சசிகலா வெங்கடேசன், திரு. ராஜேந்திரன் J.
திரு. கோவிந்தராஜன் E., திரு. கணேஷ் R.

## விஜயநகர்:

### விஜயகுமார் கே. & சுஷீலா

**துதிக்க:** ஆறு பேர் மலர்ச்சிபெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். மூன்று இடங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட தேவன் கிருபை செய்தார். தேவ நாமம் மகிமைக்கென்று சிக்ரி ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. விபத்தினால் நடக்க முடியாமலிருந்த லாரி ஓட்டுநர் கமலேஷ் பாய் ஜெபத்தின் மூலம் விரைவில் நடக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போக்கரபோலா, சம்லாய்பன்வா கிராமங்களில் நடைபெற்றுவரும் ஆலயக் கட்டுமானப் பணிகள் தடையின்றி விரைவில் முடிய; 11 சபைகளும் ஆவிக்குரிய வாழ்வில் வளர; டுங்ராபீல் இன மக்கள் மத்தியில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; தொண்டை கட்டியினித்தம் பேசவும், சாப்பிடவும் கஷ்டப்படும் சுனிதாவையும், நரம்பு பிரச்சனையினால் நடக்க முடியாமல் கஷ்டப்படும் காலுபாயையும், இரத்த குறைப்பாட்டினால் மிகவும் பெலவீனமாயிருக்கும் சந்துபாயையும் தேவன் விரைவில் குணப்படுத்த ஜெபிப்போம்.

## மெஹசானா:

### சம்புநாத் நாயக் & ராஜேஸ்வரி

**துதிக்க:** பர்மார் இன மக்களுக்கு புடோடா கிராமத்தில் நடத்தப்பட்ட தேடுவோர் முகாமில் அநேகர் கலந்து கொண்டு வேத வசனத்தை வாஞ்சையோடு கேட்டனர். சாமேஷ்வர்பார்க் கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு தொடங்க தேவன் கிருபை செய்தார். ஆனந்தி மற்றும் சோனல் பேன் கிறிஸ்துவின் வழிநடத்துதலால் பிறருக்காக ஜெபிக்கும் ஊழியம் செய்து வருகின்றனர். வீடின்றி தவித்த சந்திரிகாவுக்கு தேவன் நல்ல வீட்டைத் தந்து ஆசீர்வதித்துள்ளதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ள பர்மார் இன மக்கள் மத்தியில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; கோகிலா பேன் வீட்டில் நடத்தப்பட்ட இரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு முழுமனதுடன் விசுவாசிக்க; ஆஷிஷ் மற்றும் ஆகாஷ்க்கு ஏற்ற கிறிஸ்துவ வாழ்க்கைத் துணை அமைய; உஞ்சா கிராமத்தில் நடைபெறவிருக்கும் தேடுவோர் முகாமில் அநேகர் கலந்துகொள்ள ஜெபிப்போம்.

## வாழ்க்கையை மாற்றிய பெண்களின் ஜெபம்

*ஹரியானா மாநிலம், ரத்தியா பணித்தளத்தின் எம்.பி. சோட்டர் கிராமத்தில் வசிக்கும் பல்வீர்சிங் போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு, தினமும் அதிக அளவில் போதை மாத்திரைகள் உட்கொண்டு வேலைக்குச் செல்லாமல் எல்லாரிடமும் தகராறு செய்வதும், மனைவியை அடிப்பதுமாக வாழ்ந்து வந்தார். அவரின் வீட்டிற்குச் சென்ற கேரா மற்றும் எம்.பி. சோட்டர் கிராம விசுவாச பெண்கள் அவரின் மனைவி மஞ்ஜீத் கௌருக்கு சுவிசேஷம் அறிவித்து ஜெபித்து வந்தார்கள். அவர்களின் தொடர் ஜெபத்தின் மூலம் தேவன் பல்வீர் சிங் வாழ்வில் ஒரு மாற்றம் கொண்டுவந்தார். தற்போது அவர் போதை மருந்து எல்லாவற்றையும் எறிந்துவிட்டு கிறிஸ்துவின் அடியவராகிவிட்டார். சாட்சியுள்ள கிறிஸ்தவ குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். அல்லேலூயா!*

## மார்ச் 22 சனி

### ஜாவ்டா – தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளி & விடுதி:

**ஹரிபாபு & பங்கஜம், பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா, சதீஷ் & கிறிஸ்டி ஜெயந்தி, டேனியல் ராஜாமணி & சோஃபியா, ரூத் மற்றும் தாங்பியாக்முயான்**

**துதிக்க:** டாக்டர். பியூலா அவர்களின் மூலம் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் மாணவர்களுக்கு ஆலோசனையும், மருந்துகளும் வழங்கப்பட்டன; கை பந்து மற்றும் கால் பந்து போட்டிகளில் நமது மாணவர்கள் தாலுகா மற்றும் மாவட்ட அளவில் விளையாட தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 10 மற்றும் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு மேற்படிப்புக்கான ஆலோசனை பயிற்சி வழங்கிட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10ஆம் வகுப்பு அரசாங்கத் தேர்வு எழுதும் 48 மாணவர்களுக்கும், 12ஆம் வகுப்பு தேர்வு எழுதும் 9 மாணவர்களுக்கும் தேவன் விசேஷித்த ஞானத்தை அருளிச்செய்ய; நீட் தேர்வுக்கு ஆயத்தப்படும் மாணவர்கள் அதை நல்லமுறையில் எழுத; சிற்றம்மை யினால் பாதிக்கப்பட்டு வீடுகளுக்குச் சென்றுள்ள மாணவர்கள் சுகம் பெற்று விரைவில் பள்ளிக்குத் திரும்ப; பள்ளியில் விளையாட்டு மைதானம் அமைக்க தேவையான நிலம் கிடைக்க; அரசாங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு தகுதி யான, திறமையான, அர்ப்பணமுள்ள ஆசிரியர்கள் கிடைத்திட ஜெபிப்போம்.

## தாத்ரா & நகர் ஹவேலி

**கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா**

**துதிக்க:** நாகர், பார்சாய், கின்னோலி ஆகிய கிராமங்களில் புதிதாக ஏழு குடும்பங்கள் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். நமது விசுவாசி மல்லி பாய் இரவின் இருட்டில் தவறுதலாக பாம்பை மிதித்துவிட்டபோதிலும் அது தீண்டாதபடி தேவன் பாதுகாத்தார். லாசி பாய், கிரண் பாய் ஆகியோரை வாகன விபத்திலிருந்து தேவன் அற்புதமாக பாதுகாத்தார். நுரையீரல் வியாதியினால் அவதியுற்று வந்த பான்சிபாயை குணப்படுத்திய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உடல் முழுவதும் வெள்ளைத் தழும்புகள் பரவியிருக்கும் சூரஜ் தேவனால் சுகம்பெற; மரத்திலிருந்து கீழே விழுந்ததில் இடுப்பு மற்றும் கைகளில் காயமுற்றிருக்கும் ஜெய்வந்தி பென் விரைவில் குணமடைய; ஜீப் விபத்தில் காயமடைந்துள்ள சோன்ஜி பாய் விரைவில் சுகம் பெற; சிறுநீரகப் பிரச்சனையினால் உடல் வீங்கி காணப்படும் ஜாணுபாயை தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

மார்ச்
23
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுகாந்தோ குமார் சிங்
திருமதி. நெம்ஸாவா தங்லால் ஜெள

# மகாராஷ்டிரா

## சுர்கானா:

### மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

**துதிக்க:** பெஹரா கிராமத்தைச் சேர்ந்த இளம் வாலிபன் உமேஷ். மனநலம் பாதிக்கப்பட்டு காடுகளில் சுற்றித் திரிந்த அவனை குணப்படுத்த பல பூஜைகள் செய்தும் சுகம் கிடைக்காத நிலையில் ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்டு, அங்கு சபை விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகமருளினார். சிவ்பாடா மற்றும் ஹிரன்பூர் கிராமத்தில் புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்க தேவன் உதவி செய்தார். ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியில் 32 வாலிபர்கள் கலந்துகொண்டனர். சபையை நடத்த அளிக்கப்பட்ட பயிற்சியில் சபை மூப்பர்கள் 27 பேர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கேத்துபாய், சோனிராவ் ஆகியோர் ஆலயம் கட்டவிடாமல் தொடுத்த வழக்கினால் பத்தர்டி கிராம ஆலயக் கட்டுமானப்பணி தடைப்பட்டுள்ளது. இவர்கள் தேவனால் தொடப்படவும், ஆலய கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கப்படவும்; குக்கட்முண்டா கிராமத்தைச் சேர்ந்த யஷ்வந்த் பாய் மற்றும் போரிகவுடா கிராமத்தைச் சேர்ந்த எட்டு பூஜாரிகள் மற்றும் பப்லூன் கிராமத்தைச் சேர்ந்த பாண்டு & மனோகர் ஆகியோர் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதோடு, ஆராதனையை தடைசெய்ய முயற்சித்து வருகிறார்கள். எதிர்ப்பாளர்கள் தேவனின் அன்பினால் தொடப்பட ஜெபிப்போம்.

## பிம்பள்நேர்:

### பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஸ்வரி

**துதிக்க:** கடி மற்றும் பல்சானா கிராமங்களில் வாரம்தோறும் பெண்கள் ஜெபக் கூடுகை நடைபெறுகிறது. ஆஸ்தா மற்றும் மோவாங்கி கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்க தேவன் கிருபை செய்தார். காச நோயினால் பாதிக்கப்பட்ட ஜோதியை விட்டுச் சென்ற அவரது கணவருக்காக ஏறெடுத்த ஊக்கமான ஜெபத்தின் மூலம் அவர்கள் மீண்டும் சேர்ந்து வாழ கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதும் நமது விசுவாசிகளின் பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற; ஜோரி, கானிமண்டல், மோகபாடா கிராமங்களில் விரைவில் ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட; ரோகட், கசட்பாரி, பஞ்சாபோலி ஆகிய கிராம பஞ்சாயத்துகளில் ஆலயக் கட்டுமானத்திற்கு அனுமதி கிடைக்க; வால்வ் கிராமத்தில் ஆராதனையைத் தடைசெய்யும் லவ்பாய் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## மார்ச் 24 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. நிரோலா டிகல்
திரு. கெனோஸ் ஸ்டான்லி இன்பராஜ்

### நேர்: மூர்த்தி & பாரதி

**துதிக்க:** இரண்டு இடங்களில் பெண்கள் கூடுகையும், இரண்டு இடங்களில் சிறுவர் கூடுகையும் சிறப்பாக நடைபெற்றது. வாஸ்மர் கிராமத்தில் தடைப்பட்டிருந்த ஆராதனை மீண்டும் துவங்கப்பட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ள கிராமங்களில் அநேக தொடர் பாளர்கள் கிடைக்கவும், ஆராதனைக் குழுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவும்; தொடங்கப்பட்டுள்ள வேதாகம விளக்க வகுப்புகளில் விசுவாசிகளும், வாலிபர்களும் உற்சாகமாக கலந்துகொள்ள; நடக்க விருக்கும் சுவிசேஷம் அறிவிக்கும் நிகழ்ச்சி எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

### தடுகோன்: எபிநேசர் சாமுவேல் & ஜோஸ்னா ஜெயராணி

**துதிக்க:** 12 பேர் இருளின் ஆதிக்கத்தி லிருந்து கிறிஸ்துவின் மெய்யான ஒளிக்குள் பிரவேசித்துள்ளனர். கடிக்யா கிராமத்தைச் சேர்ந்த ஜங்கிலி பாயிக்கு ஐந்து வருடங்களாக கண்ணில் நீர் வடிந்து, எந்த வைத்தியத்தினாலும் குணப்படுத்த முடியாத நிலையில் ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். பிசாசின் கட்டுகளினால் திடீரென பேசும் திறன் இழந்து, உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த மோக்ரா பாய் விசுவாசிகளின் ஜெபத்தினால் ஒரே வாரத்தில் பூரண சுகமும், பேசும் திறனையும் பெற்றார். கை கால் வீங்கி படுக்கையிலிருந்த மோகி பாயை குணப்படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மோனிகாவுக்கு தேவன் சுகமருள; கடந்த பத்து வருடங்களாக இரத்தமாகவே மலம் கழிக்கிற ரோகிதாஸ், கழுத்து கட்டியினால் அவதியுறும் அரவிந்த் ஆகியோரை தேவன் குணப்படுத்த; கர்ப்பத்திலேயே குழந்தை இறந்துவிட்டதால் துக்கத்திலிருக்கும் பாஸ்சாயின் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் அளிக்க ஜெபிப்போம்.

### சோப்டா: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** கை எலும்பில் முறிவு ஏற்பட்ட எலாஷ் ராகேஷ் என்ற சிறுவன் சுகம் பெற்று விடுதி திரும்ப தேவன் உதவி செய்தார். சோப்டா பணித்தளத்தின் விசுவாசி தன் மகன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற மூன்று வருடங்களாக ஜெபித்து வந்தபோது தேவன் விடுதலை அருளினார். மஞ்சள் காமாலையினால் பாதிக்கப்பட்டிருந்த விடுதி சிறுவன் விஜய் தேவ கிருபையினால் விரைவில் சுகம் பெற்றான். கடும் குளிர் நாட்களில் விடுதி சிறுவர்களுக்கு சளி, இருமல், காய்ச்சலிலிருந்து சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கை எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ள விடுதி சிறுவர்களான பிரேம் மற்றும் ஈஸ்வருக்கு தேவன் பூரண சுகமருள; 10ஆம் வகுப்பு தேர்வு எழுதி வரும் மாணவர்கள் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றிப்பெற; ஐந்து வருடங்களாக உடல் முழுவதும் ஊறலினால் கஷ்டப்படும் விசுவாசியின் மகன் அர்ப்பித்துக்கு தேவன் பூரண சுகமருள; மூன்று வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் விசுவாசி சுனில் குடும்பத்தை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; மோகிபாய் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**மார்ச்**
**25**
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. லிங்நெய்ஹோய் ஜெஜ

## இகத்புரி:

### நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** ஜர்வாட்குர்த்தா கிராமத்தில் விசுவாசி ஹரிபண்டுவின் காளை மாடு அவரது முகத்தை கொம்புகளினால் தாக்கினபோது கண்கள் பாதிக்காதபடி தேவன் பாதுகாத்தார். தற்கொலைக்கு முயற்சி செய்த சோனாலி சஞ்சய் ஜெபத்தின் மூலம் தற்கொலை ஆவியிலிருந்து விடுதலை பெற்றார். தாலேகாவ் கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்கிட கர்த்தர் உதவி செய்தார். ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் புதிய தொடர்பாளர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கணவர் தற்கொலை செய்து கொண்டதால் தனியாக இரண்டு சிறு குழந்தைகளுடன் பயத்தினாலும், அசுத்தாவியின் தாக்குதலினாலும் கஷ்டப்படும் வனிதா யோகேஷ்க்கு தேவன் விடுதலை தர; தீராத வயிற்று வலியினால் அவதியுறும் புதிய தொடர்பாளரான நந்தாவின் மருமகள் அஸ்வினிக்கு தேவன் அற்புத சுகமருள; இரத்த சோகையினால் பாதிக்கப்பட்டுள்ள 9ஆம் வகுப்பு படிக்கும் ஷாலினிக்கு தேவன் சுகமருள; நமது சபை விசுவாசிகளை குழப்பி வரும் பிற சபை மக்கள் மனந்திரும்ப; தாம்னி, ஜுனாவனிவாடி, கடுச்சிவாடி, ஆத்தேர்வாடி ஆகிய கிராமங்களின் தலைவர்களான கௌதம் மற்றும் பாண்டுரங் ஊழியத்திற்கு இடையூறு விளைவித்து ஊழியர்களை பய முறுத்தி வரும் இவர்கள் மனந் திரும்பி இரட்சிக்கப்பட; தண்ணீர் குடிக்க இயலாமல் தொண்டை வலியினால் கஷ்டப்படும் கீர்த்தி சஞ்சய் அறுவை சிகிச்சையின்றி சுகம்பெற; விதவை விசுவாசிகளான கமல் மற்றும் வனிதாவுக்கு ரேஷன் கார்டு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

## சாலீஸ்காவ்:

### ஏசுபிரகாஷ் & சுனந்தாபெல்லி

**துதிக்க:** பாண்டுகாவ், வக்குடா, போனாடி மற்றும் பான்சி கிராமங்களில் பின் தொடர் பணி மூலம் மீண்டும் மக்களை சந்திக்க தேவன் கிருபை செய்தார். சுகவீனத்தினால் படுக்கையிலிருந்த கவுதம் பாஹல் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். கையில் ஏற்பட்ட கட்டியினால் கை தூக்க முடியாமல் கஷ்டப்பட்டு வந்த அல்கா விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகம்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக இரத்த அழுத்தத் தினால் கஷ்டப்பட்டு வரும் நமது மிஷனெரிக்கு தேவன் சுகமருள; ஒற்றைத் தலைவலியினால் கஷ்டப்பட்டு வரும் ரேகா பூரண சுகம்பெற; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள ஜலால் மற்றும் சந்து குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; திடீரென கை கால்கள் செயலிழந்துபோன பிரகாஷுக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

மார்ச்
26
புதன்
உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜேக்கப் ஞானப்பண்டிதன் M.
திருமதி. மரிய செல்வி தர்மராஜ்
திரு. ஆல்பர்ட் சந்தோஷ் ராஜ் J.
திருமதி. சிங் நெய் சியான்

## அக்கல்குவா:

### ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

**துதிக்க:** எட்டு கிராமங்களில் பின்தொடர் பணி செய்யப்பட்டு அநேகருக்காக ஜெபித்து வர தேவன் உதவி செய்தார். ஏழு சபைகளில் முழுநேர உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு கிராமத்தினரின் இரட்சிப்புக்காக ஊக்கத்தோடு ஜெபிக்க தேவன் உதவி செய்தார். இரண்டு இடங்களில் பெண்கள் சிறப்புக் கூடுகை தடையின்றி சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகப்பிரச்சனையிலிருந்து டிச்சுபாய் சுகம்பெற; சுனந்தா காச நோயிலிருந்து விடுதலைபெற; தொடர் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் கஷ்டப்பட்டு வரும் ராஜுபாய் பரிபூரண சுகம்பெற; வீடு கட்ட ஆரம்பித்துள்ள உஷாவுக்கு அரசாங்கத்தின் அனைத்து உதவிகளும் தடையின்றி கிடைக்க ஜெபிப்போம்.

## பொய்சார்: பசந்தா குரு

**துதிக்க:** கைப்பிரதி ஊழியம் சிறப்பாக செய்ய தேவன் கிருபை செய்தார். மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் அநேக விசுவாசிகள் வாஞ்சையோடு கலந்துகொண்டு தேசத்திற்காக பாரத்துடன் ஜெபித்தனர். திருமணமாகி 12 ஆண்டுகளுக்குப் பிறகு ஜெபத்தின் மூலம் பசுலாபேனை குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சராசி கிராமத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராதனையை நிறுத்த முயற்சிக்கும் சில அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; தலாவலி கிராம சபை விசுவாசிகளை மிரட்டுவோர் இயேசுவின் அன்பினால் தொடப்பட; காரே ஆலயத்தை இடித்துவிட முயற்சித்து வரும் கிராமத் தலைவரின் இருதயத்தில் தேவன் இடைப்பட; பயத்தினால் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடத் தயங்கும் மக்களின் இருதயத்தை தேவன் ஸ்திரப்படுத்த ஜெபிப்போம்.

## கட்சாந்துார்:

### பால் ஆல்பர்ட் & ராணி ஜெஸிலெட்

**துதிக்க:** அசுத்தாவியின் பிடியினால் சுகவீனமாகி இரத்த வாந்தி எடுத்துக் கொண்டிருந்த சந்தீப் மற்றும் தீபா அநேகரின் ஊக்கமான ஜெபத்தினால் குணமானதோடு அசுத்தாவியின் பிடியிலிருந்தும் விடுதலை பெற்றார். நீண்ட நாட்களாக வியாதியினால் பாதிக்கப்பட்டு வேலை செய்ய முடியாமலிருந்த ஜகன் மற்றும் பவித்ராவை ஜெபத்தின் மூலம் பூரணமாய் குணப்படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இனம்புரியாத நோயினால் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருக்கும் மூன்று வயது பிரியவன்சியை தேவன் குணப்படுத்த; கண் குறைப்பாட்டினால் அவதியுறும் ராதா, புல்லாபாய், யமுனா ஆகியோருக்கு தேவன் தெளிவான பார்வையருள; திருமணத்திற்கு ஆயத்த மாயிருக்கும் நிர்மலா, விலாஸ், சஞ்சய் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை அமைய ஜெபிப்போம்.

மார்ச்
27
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. மூர்த்தி T.

## போரடி:

### ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** புது போரடி கிராமத்தில் நிறை மாத கர்ப்பத்தில் குழந்தை இறந்து மூன்று நாட்களானபோதிலும் பபிதாவின் ஜீவனை தேவன் பாதுகாத்தார். அம்பாலா, ஜுனாபானி, பாஹறாபல்லா கிராமங்களில் நற்செய்தி பகிர்ந்திட தேவன் கிருபை செய்தார். நிம்பாபாரி கிராமத்தில் சிறுவர்களுக்கான வேதாகம வகுப்புகள் நடத்தப்பட்டது. ஊம்ரியில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகையில் சுமார் 70 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உடல் முழுவதும் கட்டிகளினால் பாதிக்கப்பட்டுள்ள அனிஷ் மற்றும் வசந்தாவுக்கு தேவன் பூரண சுகமருள; காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ள லக்ஷ்மியை தேவன் குணப்படுத்த; சுமி, சர்மிளா, அஞ்சலி, மோகன் ஆகியோர் மனநோயிலிருந்து சுகம்பெற; சபை மூப்பர்கள் மற்றும் வாலிபர்களால் உருவாக்கப்பட்டுள்ள நற்செய்தி குழுவை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.

## கான்தேஷ் பிராந்தியம்:

### ஜுபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்

**துதிக்க:** மூன்று நாட்கள் நடைபெற்ற பிராந்திய ஜெபக்கூடுகையில் அநேக விசுவாசிகள் கூடி ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். நம் விடுதி மாணவி அர்ப்பித்தாவின் கழுத்து பறந்து வந்த பட்டத்தின் நூலினால் அறுப்பட்டபோது உடனடியாக சிகிச்சை கிடைக்கவும், சுகம்பெறவும் தேவன் கிருபை செய்தார். பக்கவாதத்தினால் படுத்தபடுக்கையாயிருந்த ரோகட் கிராமத்தின் தாய்பேன் என்பவர் விசுவாசிகளின் ஜெபத்தினால் பூரண சுகம்பெற்று, குடும்பமாக தேவனை ஆராதித்து வருகிறார்கள். பலவருட ஜெபத்திற்குப்பின் ரோகட் கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கழுத்து பகுதியிலுள்ள கட்டியினால் சாப்பிட முடியாமல் கஷ்டப்படும் அரவிந்துக்கு தேவன் பரிபூரண சுகமருள; ரிதம்பாய் மனநிலை பாதிப்பிலிருந்து விடுதலைபெற; மாடு முட்டி காயமடைந்துள்ள யமுனா சுகம்பெற; விபத்தில் சிக்கியப்பின் தூக்கமின்றி தவிக்கும் கமலிபேனுக்கு தேவன் சுகமருள; மந்திர வேலைகளை விட்டுவிட்டு ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் வினோத்பாய் இயேசு கிறிஸ்துவை முழுமனதுடன் விசுவாசித்து ஏற்றுக்கொள்ள; ரோகட், கசர்பாரி, பஞ்ச்போலி ஆகிய கிராமங்களில் ஆலயம் கட்ட தடையில்லா சான்றிதழ் பஞ்சாயத்திலிருந்து விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

மார்ச்
28
வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. ஜெரினா ஷிம்ரா

## கர்நாடகா

### நிட்குண்டி:

### மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா

**துதிக்க:** விசுவாசி உஷாவின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி கிராமத்தினர் காண சாட்சியாக நடைபெற்றது. கிறிஸ்துவின் நிமித்தம் பாடுகளை சகித்து வந்த விஜய லக்ஷ்மியின் அங்கன்வாடி பணி மீண்டும் கிடைக்க தேவன் கிருபை செய்தார். பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் ராதிகா விடுதலை பெற்றார். சி.ஏ. படிக்க பணமின்றி சிரமப்பட்ட அபிஷேக், ஒரு கிறிஸ்தவ அமைப்பின் உதவியுடன் சி.ஏ. படிப்பில் சேர தேவன் உதவி செய்தார். காட்டு பகுதியில் ஆடுகளை மேய்த்து வந்த ஜெயஸ்ரீயை ஓநாயின் தாக்குதலிலிருந்து காப்பாற்றிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடும்பப் பிரச்சனையினால் பிரிந்து வாழும் ராதிகா & பசவராஜ் தம்பதியினர் சமாதானத்தோடு சேர்ந்து வாழ; வறுமையில் தவிக்கும் நனவ்வா & ராஜு குடும்பத்தின் வறுமை நீங்க ஏற்ற வேலை கிடைக்க; திருமணத்திற்கு ஆயத்தமாயிருக்கும் சக்குபாய் மற்றும் நீலம் மாவுக்கு தேவன் விசுவாச வாழ்க்கைத் துணையை தந்தருள ஜெபிப்போம்.

### முண்டர்கி: சாமுவேல் பெபர்தா

**துதிக்க:** ஒருவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சராக ஏற்றுக்கொண்டு தன் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளார். விஜயநகர் மற்றும் கொப்பல் மாவட்டங்களில் பெரிய அளவில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். வேத வினா போட்டியில் வாலிபர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டதோடு வேத அறிவில் வளர்ந்து வருகின்றனர். குன்றிகேசரி கிராமத்தில் சிறுவர்களுக்கு வேதாகம வகுப்பு நடத்த தேவன் கிருபை செய்தார். மார்த்தா பிரபாகரின் வாழ்வாதாரத்திற்கு ஒரு தையல் மிஷன் வாங்கிட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜெயப்பா, வடேக்கர், சந்திரசாரா, மகேஷ், சிவம்மா, நந்தினி ஆகியோர் இரட்சிக்கப்பட; கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் அம்பேத்கர், முச்சிகர் ஆகியோர் தடையின்றி அறிக்கை செய்ய; இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்கள் தவறாமல் ஆலய ஆராதனையில் கலந்துகொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர; கடன் பிரச்சனையில் சிக்கித்தவிக்கும் விசுவாசிகளின் பொருளாதார சிக்கல்கள் நீங்க ஜெபிப்போம்.

### ஷிக்காவ்: நரேந்திரா குமார்

**துதிக்க:** ஒன்பது வயது சிறுமி சுருதி அதிகளவு சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்ட போது விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினால் சுகம்பெற்று வீடுதிரும்பினாள். சகுந்தலாவை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். விபத்தில் சிக்கிய விஜய் அதிக காயமின்றி தேவனால் பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சர்க்கரை நோயிலிருந்து சுருதி பரிபூரண சுகம்பெற; சங்கனூர் மற்றும் துன்சி உப பணித்தளங்களில் ஊழியம் விரிவடைய; திட்டமிடப்பட்டுள்ள அனைத்து கூடுகைகளும் தடையின்றி நடைபெறவும், அநேகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

## மார்ச்
# 29
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஆலிஸ் ரஞ்சித் ஜேம்ஸ்
திரு. ஜாண் ஆன்ட்ரூஸ் சுகிர்தராஜ்

### முண்ட்காட்:
**கோன்கா கிரி பாபு & லூர்து மேரி**

**துதிக்க:** இரண்டு பேர் கிறிஸ்துவின் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். சடகரவள்ளி கிராமத்தில் புதிதாக ஆராதனைக் குழு துவங்க தேவன் கிருபை செய்தார். சிவா & ரேஷ்மா, மஞ்சுநாத் & லலிதா, சரோஜா மற்றும் ஏரம்மா குடும்பத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டி வருதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரேஷ்மா, கீதா, சாரா ஆகியோரை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; வெளிப்புற நற்செய்தி ஊழியத்தின் மூலம் சந்திக்கப்பட்டுள்ள எல்லாப்பூர், வரூர், கல்கட்டாசி, சப்பி மற்றும் சிர்சி கிராமங்களில் அநேக தொடர்பாளர்களை தேவன் எழுப்பித் தரவும், இக்கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் விரைவில் துவங்கப்படவும் ஜெபிப்போம்.

### ஹுப்ளி பிராந்தியம்:
**சுனில் குமார் & சங்கீதா**

**துதிக்க:** இட்டஹி கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குடுகு மாவட்டத்தில் ஊழியம் ஆரம்பிப் பதற்கான சாத்தியக் கூறுகளைப் பற்றி ஆய்வு செய்ய தேவன் உதவி செய்தார். சிர்ஹட்டி கிராமத்திலுள்ள கல்லறை தோட்டத்திற்கு பஞ்சாயத்திலிருந்து சுவர் அமைத்துத்தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நந்த்காட் மற்றும் எல்பர்கா பகுதிகளில் ஆலயம் கட்ட பெறப்பட்டுள்ள நிலம் ஆய்வு செய்யப்பட்டு விரைவில் அனுமதி வழங்கப்பட; சுதேச ஊழியர் சந்தோஷ் மீதுள்ள பொய் வழக்கு விரைவில் முடிவுபெற; பணித்தளத்திலுள்ள விசுவாச வாலிபர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க; ஐந்து வருடங்களாக குழந்தையின்றி தவித்து வரும் லலிதா, ஷோபா, அஸ்வினி ஆகியோரை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### பலமநேர்:
**பால் குப்புசாமி & ஷைலா**

**துதிக்க:** பசவராஜகண்டரிகா கிராமத்தில் நடைபெறும் ஆராதனையில் ஒவ்வொரு வாரமும் புதிய ஆத்துமாக்களை தேவன் தந்து வருகிறார். சிறுநீரக குழாயில் அறுவைசிகிச்சை செய்தும் தீர்வு கிடைக்காத நிலையில் ஆலய ஆராதனையில் கலந்துகொண்டு ஜெபித்த சுப்பிரமணி யத்துக்கு தேவன் அற்புத சுகமருளினார். அநேக நாட்களாக படுக்கையிலிருந்த கங்கா ராஜுக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சரஸ்வதி, வெங்கட்ராமா மற்றும் புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைய; சபை மூப்பர் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற; தொடர்ந்து மூன்று முறை டைபாய்டு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள ஷாலினிக்கு தேவன் பூரண சுகமருள; வறுமையினால் கஷ்டப்படும் குமாரி குடும்பம் அதிலிருந்து மீண்டு வரவும், நல்ல வேலை கிடைக்கவும்; குடியின் அடிமைத்தனத்திலிருந்து கங்காதர் மனந்திரும்பவும், குடும்பத்தில் சமாதானம் நிலவவும் ஜெபிப்போம்.

மார்ச்
30
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கொன்கனி சம்பத்பாய்
திருமதி. ஷேத்ரிமயூம் பிரியா தேவி ஜீவர்
திரு. ஆபிரகாம் S.

## ரோத்தம்:

### தேபதத்தா லிமா & சோனியா ராணி

**துதிக்க:** மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்த ராஜம்மா ஜெபத்திற்குப்பின் சுகம் பெற்று வருகிறார். லக்ஷ்மி & ராஜு தம்பதியினருக்கு ஜெபத்தின் பலனாக குழந்தையை தேவன் தந்தருளினார். பிசாசின் பிடியிலிருந்து லக்ஷ்மி தேவிக்கு தேவன் விடுதலை அருளினார். நீண்ட நாட்களாக நெஞ்சு வலியினால் கஷ்டப்பட்டு வந்த ரேணுகா மற்றும் மல்லிகாவுக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரக சுத்திகரிப்பு செய்வதினால் அதிக பெலவீனமாக இருக்கும் விசுவாசி பத்மாவுக்கு தேவன் பூரண ஆரோக்கியத்தை தந்தருள; வேலையின்றி தவிக்கும் பிரயுக்தா மற்றும் அனிதாவுக்கு தேவன் ஏற்ற வேலை வாய்ப்புகளைத் தந்தருள; எலிசபெத்தின் வீடு கட்டுமானப் பணிகளுக்கான தேவைகள் சந்திக்கப்பட; கர்ப்பவதியான அக்ஷயாவுக்கு இரத்த சோகை பிரச்சனையிலிருந்து பூரண சுகத்தையும், வயிற்றிலுள்ள குழந்தைக்கு பூரண ஆரோக்கியத்தையும் தேவன் அருள ஜெபிப்போம்.

### குப்பம்: வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** காட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது தாக்கவந்த யானையிடமிருந்து தேவன் நஞ்சாரியை பாதுகாத்தார். பவித்ரா மற்றும் ரோஜாவுக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். சபை மூப்பர்களுக்கு ஆத்தும ஆதாயப் பயிற்சி பயனுள்ளதாய் அமைந்தது. பிரிந்து வாழ்ந்து வந்த நாகராஜ் & புனிதா மற்றும் சார்லஸ் & பாரதி தம்பதியினர் ஜெபத் திற்குப்பின் ஒற்றுமையாக குடும்பம் நடத்த கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அறுவை சிகிச்சையின் மூலம் கால் அகற்றப்பட்டுள்ள ஜானுக்கு தேவன் பூரண சுகமருள; அவிசுவாசியான வாலிபனை திருமணம் செய்ய வற்புறுத்தும் காவியாவின் பெற்றோர் மனந்திரும்ப; சுரேஷ், துர்காராஜ் ஆகியோரின் குடும்பங்களில் உள்ள குழப்பங்கள் நீங்கி ஒற்றுமையாக சேர்ந்து வாழ; திட்ட மிடப்பட்டுள்ள மூப்பர் பயிற்சி, வாலிபர் கூட்டங்கள் ஆகியவை தடையின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

## வெட்டவலம்:

### பிரைட் ஜெயக்குமார் & பியூலா

**துதிக்க:** கெலாயா, சோராதூர் மற்றும் பெரிய ஓலைபாடி கிராமங்களில் நடத்தப்படும் சிறுவர் வேதாகமப் பள்ளிகள் தடையின்றி நடைபெற்று வருகிறது. இக்கிராமங்களில் விரைவில் சபைகள் எழுப்பப்பட; பெரிய ஓலைபாடி கிராமத்தில் செவ்வாய் தோறும் நடத்தப்படும் ஜெபக் கூட்டத்தில் அநேகர் பங்கு பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுவர்கள் மூலம் கிறிஸ்துவை அறிந்துகொண்ட தனிகாச்சலம் & சுப்புலக்ஷ்மி, குபேந்திரன் & மகேஷ்வரி, கண்ணன் & சிவரஞ்சனி, சந்திரா ஆகியோரின் குடும்பத்தினர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பிரிந்து வாழும் நீலம் & கோபார் தம்பதி யினர் சேர்ந்து வாழ; திடீரென மரண மடைந்துள்ள மணியின் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் தர ஜெபிப்போம்.

**மார்ச்**
**31**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அமிர்தா கோல்டா ஆசீர்
திருமதி. தோதி குர்ரம்வாரி ஹிமா பிந்து ரமேஷ்
திரு. பசந்தா குரு, திரு. ஜாண் எசுங்

### அஞ்செட்டி:

### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** நான்கு கிராமங்களில் பின் தொடர் பணி செய்ய கர்த்தர் கிருபை செய்தார். இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு தந்துள்ள சுகபெலனுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாதவி, முனிராஜ், சேகர், சாந்தி, பாண்டியராஜ், நாகராஜ், சகுந்தலா, நாகேந்திரன், வனிதா ஆகியோரின் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட; ஹில்டா மற்றும் விக்டோரியா சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும், திருக்குமரன் வலிப்பு வியாதியிலிருந்தும், சேகர் இதயப் பிரச்சனையிலிருந்தும், பீட்டர் மற்றும் மாணிக்கம் சுவாச கோளாரிலிருந்தும் பூரண சுகம்பெற; விபத்தை சந்தித்துள்ள 10 வயது சிறுமி எஸ்தருக்கு தேவன் பூரண சுகம்தர ஜெபிப்போம்.

## வழிமாறினாலும் வார்த்தை விதைக்கப்பட்டது

*ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள அமலகாச்சி பணித்தளத்தில் ஊழியம் செய்துவருகிற மிஷனெரி கஜன் சம்ரமரி குடும்பம் விசுவாசிகளை சந்திக்க ஒரு கிராமத்திற்கு சென்றிருந்த வேளையில், வேலையின் நிமித்தம் அனைத்து விசுவாசிகளும் வெளியே சென்றிருந்தனர். ஒருவரையும் சந்திக்க முடியாத சூழ்நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பிய வேளையில், வழிமாறி வேறு ஒரு கிராமத்தில் நுழைந்துவிட்டனர். யாரையும் தெரியாத அந்த புது கிராமத்தில் ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்து அங்குள்ளோருக்கு நற்செய்தி கூற தேவன் கிருபை செய்தார். நாராயணன் என்கிற வாலிபனின் தாயார் மகனின் புகைப்படத்தை தந்து ஜெபிக்க கூறவே, நீண்ட நாட்களாக எங்கு இருக்கிறான் என்ற தகவல் தெரியாத நாராயணனுக்காக ஜெபித்து வீடு திரும்பினர். மறுநாளே நாராயணன் மும்பையிலிருந்து வீடு திரும்பிவிட்டான் என்ற தகவல் வந்தது. தற்போது அந்த கிராமத்தில் ஒரு ஜெபக் கூட்டம் நடத்தப்படுகிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## ஜெபத்தின் வல்லமை

*மஹாராஷ்டிரா மாநிலம் பிம்பல்நேர் பணித் தளத்திலுள்ள ரோஹாட் கிராமத்தைச் சேர்ந்த நடுத்தர வயது பெண்மணி தாய்பேன். கை கால்களில் வலி ஏற்பட்டு சிறிது சிறிதாக உடலில் பரவி பக்கவாதம் வந்து படுத்தபடுக்கையானார். அநேக இடங்களுக்கு அவரை தூக்கிச்சென்று நாட்டு வைத்தியம் மற்றும் பூஜாரிகளை அழைத்து பூஜைகள் செய்தும் பலனின்றி படுக்கையில் இருந்தார். அவருக்காக ஜெபிக்க உறவினர் ஒருவர் நமது ஊழியரை அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். ஊழியரும், பிற விசுவாசிகளும் நற்செய்தி கூறி, எண்ணெய் பூசி ஜெபித்து திரும்பினர். சில விசுவாசிகள் ஒன்று கூடி தினமும் அவரது வீட்டிற்குச் சென்று ஜெபித்து வந்தனர். அவர்களது ஊக்கமான ஜெபத்தினால் ஆறு மாதங்களாக படுக்கையில் இருந்த தாய்பேன், ஒரே வாரத்தில் எழுந்து உட்கார ஆரம்பித்தார். பிறகு ஒரு ஊன்றுகோல் உதவியுடன் எழுந்து நிற்கவும், தற்போது மெதுவாக நடக்கவும் ஆரம்பித்துள்ளார். குடும்பமாக ஆலயம் வந்து தேவனைத் துதிப்பதோடு, உறவினர்களுக்கும் கிறிஸ்துவை அறிமுகம் செய்து வருகின்றனர். அல்லேலூயா!*

# 1000 மணி நேர தொடர் ஜெபம்

## 2025 மார்ச் 5 முதல் ஏப்ரல் 17 வரை

**2025 ஆம் ஆண்டின் தபசு கால நாட்களில் தேவப் பிள்ளைகளாக தேவனுடைய பாதத்தில் அமர்ந்திருந்து தேசத்தின் சுபீட்சத்திற்காக, திருச்சபைகளின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்காக, ஊழியங்களுக்காக மற்றும் ஊழியர்களுக்காக திறப்பிலே நின்று ஜெபிப்போம் வாருங்கள்.**



### *ஜெப முறைமைகள்*

**24 மணி நேர சங்கிலித்தொடர் ஜெபங்கள் (தினமும் 1 மணி நேரம் ஜெபிக்கும் 24 பேர்)**

ஜெபக்குழுக்கள், சபைகள், முன்னேற்றப் பணி மாவட்டங்கள் மற்றும் பணித்தளங்களில்

**12 மணி நேர உபவாச ஜெபங்கள்**

அனைத்து முன்னேற்றப்பணி மாவட்டங்கள் / பணித்தளங்களில்

**ஒரு நாள் / இரண்டு நாட்கள் / மூன்று நாட்கள் சிறப்பு உபவாச ஜெபங்கள்**

பிராந்திய முன்னேற்றப்பணி மாவட்டங்கள் மற்றும் பணித்தள பிராந்திய அளவில்

**3 / 16 மணி நேர சிறப்பு மன்றாட்டு ஜெபங்கள்**

ஜெபக்குழுக்கள், சபைகள், தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களின் இல்லங்களில்

*தனி நபர்களாக, குடும்பங்களாக, ஜெபக்குழுக்களாக, சபைகளாக இணைந்து இத்தொடர் ஜெபத்தில் பங்கெடுப்போம்! தேவ மகிமையை தேசத்திலே காண்போம்!!*

**தொடர்புக்கு**

*ஜெபப்பிரிவு*, **நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு,** 29, உயர்நிலைப் பள்ளிச் சாலை, அம்பத்தூர், சென்னை – 600 053. தொலைபேசி: 044-2657 4343 / 2657 4353, Email: premfmpb@gmail.com / prayer@fmpb.org




***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***